141

உ

மகாமக விளக்கம்

என்னும்

திருக்குடந்தைப் புராண வசனம்.

ஸ்ரீ கும்பேஸ்வரர் இராஜகோபுரம்,

ஆசன விளக்கம் (7-படங்களுடன்.)

இயற்றியவர்:

...த்தினசாமிபிள்ளை,

1956. [விலை அணா 10.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1956

O23:38·21193
N56

109643

குடந்தை ஸ்ரீ மௌனசுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மகாமக விளக்கம் என்னும்

திருக்குடந்தைப் புராண வசனம்.

கும்பகோணம் தலைமை அஞ்சல் நிலைய முன்னாள் தலைவர்

பு. து. இரத்தினசாமிபிள்ளை அவர்கள்

எழுதியது.

இரண்டாம் பதிப்பு

1. "காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமி யஞ்செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும்உறை யுங்குட மூக்கிலே." —அப்பர்

2. திருப்பணி செய்வோர்க்கும் சிவனையுன்னிச் செம்பொன்
விருப்புடனீ வார்பெறுக வீடு.

3. உய்வா ருதவுநிதி வாங்கித் திருப்பணியைச்
செய்வார் பெறுக சிவம்.

உரிமைப் பதிப்பு] [விலை அணா ஆறு.

1956.

(1) காமியம் = உலகவாழ்வு, ஓமியம்-ஓமகாரியங்கள்.
சாமி = கன்னி, சரசுவதி-சரசுவதி தீர்த்தம்.
கோமி = உமாதேவி. கோமதி-வடநாட்டு நதி.

(2) திருப்பணி என்பது:- சிவத் திருப்பணியன்றி மான்மியம் எழுதி அச்சிட்டு வழங்குதலும் சைவத் திருப்பணியின் பாற்படும்.

கும்பகோணம் ஸ்ரீ கலாநிதி அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பெற்றது.

உ

இந்நூலாசிரியர்

பு. து. இரத்தினசாமி பிள்ளை,

சிவபூசா துரந்தரர், தமிழறிஞர்,

யோகாசன வல்லுநர்

கும்பகோணம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முன்னுரை.

தத்துவங் கடந்த தனிப் பரம்பொருளாய், என்றும் உள்ளதாய், முற்றறிவுடையதாய், இயல்பாகவே பாசங்களின் நீங்கியதாய், பேரருள் உடையதாய், பேரின்ப வடிவினதாய் விளங்கும் பொருள் கடவுளாகும். அப்பொருளைப் பாசங்களோடு கூடிய, அறிவித்தால் அறியும் இயல்புடைய சர்வான்மாக்களும் வழிபடுவதனால், இம்மையில் பல நன்மைகளும், மறுமையில் பேரின்பங்களும் பெறுவதற்கு ஏதுவாகும். எல்லாவற்றையுங் கடந்த பொருளாகிய இறைவன் குறைவிலா மங்கல குணத்தவன். ஆதலின் நிறை மலம், அறுதியின் நீங்கி நிற்றலின் அறிவின்மேலவர் சிவனென அறைகுவர். அச் சிவபெருமான் ஆன்மாக்களின்மீது கொண்ட பெருங் கருணையினால் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுத் திருவருளே திருமேனியாகக்கொண்டு, எழுந்தருளியிருக்கும் நல்லிடங்கள்தான் நம்நாட்டிலுள்ள திருக்கோயில்களாகும். இத் திருக்கோயில்கள் அமைந்துள்ள தலங்கள் நம் நாட்டில் பலவுள. அவற்றுள் சைவ சமய ஆச்சாரியர்களால் தேவாரப் பாசுரங்கள் பெற்ற தலங்கள் மிக உயர்வுடையன. அவற்றுள்ளும் சிதம்பரம், மதுரை, திருக்காளத்தி, திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்குடந்தை முதலிய தலங்கள் மிகஉயர்வுடையன. அவற்றுள் இத் திருக்குடந்தை மாநகருள் சிவாலயங்களும், திருமால் ஆலயங்களும், புண்ணியதீர்த்தங்களும் பல அமைந்துள்ளன. இத்தலத்தைப் பற்றிய பழைய வரலாறு வடமொழியில் உள்ளது. அதை முற்காலத்தில் அகோரயாதவர் என்பவர் தமிழ்ச்செய்யுள் வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார். அது இதுகாறும் அச்சிடப்படவில்லை. பின்னர் திருக்கையிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்து மகா வித்துவான் ஸ்ரீமத் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் மிக விரிந்த முறையில் பல சைவ நலங்களுடன் பாடப்பெற்றுப் பல்லாண்டுகளுக்குமுன் அச்சியற்றப்பெற்றுள்ளது. அது இப்பொழுது கிடைப்பது அரிதாயுள்ளது. அதை முன்னிட்டுப் பல அறிஞர்கள் இதற்குமுன் இத்தலபுராணத்தை உரை நடையில் எழுதி வெளியிட்டுள்ளார்கள். அவ்வுரை நடை நூல்களிலே, 1932ஆம் ஆண்டில் இந்நகரில் அஞ்சல் அலுவலகத் தலைவராய் இருந்த உயர் சைவத்திரு **பு. து. இரத்தினசாமிபிள்ளை** அவர்களால் எழுதி வெளியிடப் பெற்றதும் ஒன்றாகும். அந்நூல் 116 பக்கங்களைக் கொண்டு விளங்குவது. அப்பிரதிகளும் கிடைப்பது அரிதாயுள்ளன. அதை முன்னிட்டு ஷை உயர் சைவத் திரு. **பு. து. இரத்தினசாமிப்பிள்ளையவர்கள்** இத் தல புராண உரை நடையைச் சுருக்கிய வடிவில் பல அன்பர்களுக்கும் பயன்படும் நிலையில் அச்சியற்றி வெளியிட்டுள்ளார்கள். இதை யாவரும் பயன்படுத்திக்கொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். வயது முதிர்ந்த காலத்திலும் மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் முப்பொருள்களினிடத்துக்கொண்ட பேரன்புதான் இவர்களை இச் சிவபுண்ணியத்தில் ஈடுபடச் செய்திருக்கிறது. இவர்கள் இறைவன் அருளால் நீண்டநாள் வாழ்ந்து இன்னும் சிவ புண்ணியங்களைச்செய்து உலகுக்கு உபகாரமாக விளங்க வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றேன்.

P. T. S. குமரசாமி செட்டியார்,
சிவ சேனாதிபதி,
செட்டிப்புதுத்தெரு, **கும்பகோணம்.**

சிவமயம்

இரண்டாம் பதிப்பு சிறப்புப் பாயிரம்.

திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்த சைவமணி
திரு. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்
இயற்றியது.

குடந்தைப் புராணத்தைக் கூறுவசனத்தால்
திடம்பெறச்செய் தச்சிட்ட செல்வன் — குடந்தை
இரத்தின சாமியெனும் என்னினிய நண்பன்
வரத்தை யுறுக மகிழ்ந்து.

திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரித்
தமிழ் விரிவுரையாளர்
வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம்
இயற்றியன.

(கலி விருத்தம்.)

க. *சிவனது பூசனை சீர்பெற ஆற்றுவோன்*
தவநெறி ஆசனம் தாம்பல கூட்டுவோன்
குவலயம் போற்ற குடந்தைநற் காதையை
இவண்பதித் தளித்தனன் **இரத்தின சாமியே.**

உ. *பனசைமா நகர்சிவ னடியவர் கூட்டத்தான்*
மனமெனும் கோவிலை மாதேவற் காக்கினன்
இனமிலாக் குடந்தையின் எழில்வர லாற்றினை
இனிய தாப் பதித்தனன் **இரத்தின சாமியே.**

சென்னைத் தமிழ்மாணவன்

திரு. மா. சிங்காரவேலுப்பிள்ளை (B. A.,) பி. ஏ.,

இயற்றியன.

முதிர்ந்த வயது முதிர்ந்தநற் கல்வி
முதிர்ந்த அறிவுடையோன் முன்னோன்—முதிர்ந்தபூசை
ஆற்றிடுவோன் மாமகவி ளக்கம் அகிலமுய்யச்
சாற்றினான் சாமிரத்ன மே.

எழுபதாண்டு தன்னில் எளிதாய் அநேக
ஒழுங்காக ஆசனங்கள் ஓங்கு—விழுச்சீர்
உறச்செய்து தேக உறுதியுற்றோன் நோய்கள்
அறவாழும் அன்பன் உவந்து.

வாழ்க அளகனென்ன வாழ்க மனையறத்தாள்
வாழ்க தனையன்கள் மாண்பாக—வாழ்கவே
வாழ்க திருக்குடந்தை வாழ்க மகநன்னூல்
வாழ்க உணர்ந்தோர் மகிழ்ந்து.

முதற்பதிப்பு. **சிறப்புப்பாயிரம்.**

நன்னெறியால் பத்திமையா ளுனிலத்தோர்
நலம்பெறுமா றறிந்து நாளும்
தன்னிகராம் திருக்குறளுக் கோர்வசனம்
தந்தளித்த தகவே போலப்
பன்னரிய திருக்குடந்தை மான்மியத்தைப்
பாமரரும் படிக்கு மாறு
மன்னுதமிழ் வசனமிரத் தினசாமி
வரைந்தளித்தான் மகிழ்ந்து வாழி.

ஊ. சா. வேங்கடராம ஐயர், தமிழ்ப்பண்டிதர்.

திருக்குடந்தை மான்மியத்தைச் செந்தமிழாற் சொன்னான்
உருக்கமுட னோதியுல குய்யத் — திருக்காமி
தந்தரத்ன சாமி தமிழ்செய் தவமென்ன
வந்தபுகழ் வள்ளல் மகிழ்ந்து.

வித்துவான் **தி. அ. அருணசலம் செட்டியார்.**

திருசிரபுரம் மகாவித்துவான் திருமிகு. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருக்குடந்தைப் புராணத்தின் சாரமே இவ்வசன நூல். இது தற்காலம் கும்பகோணம் பஜார் போஸ்ட்மாஸ்டராக இருக்கும் திருவாளர் பு. து. இரத்தினசாமி பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது.

இந்நூலின் ஆசிரியர், உயர்ந்த தமிழ்ப்புலமை சிறந்த நல்லொழுக்கம், மிகுந்த ஈசுவரபக்தி, தெளிந்த தூய அறிவு ஆகிய ஒப்பரும் தன்மை வாய்ந்தவர். இந்நூலின் இடையிடையே காணப்படும் இன்றியமையாத ஆராய்ச்சிக் குறிப்புகளைச் சேர்த்திருத்தல் இவர்தம் பரந்த ஆராய்ச்சியின் வன்மையை விளக்கும். இந்நூலைப் போலவே திருக்குறளையும் உரைநடை வடிவில் இதற்கு முன் இவர்கள் வெளியிட்டிருத்தல் இவர்களின் பொது நல ஊழியத் திறனை நன்கு புலப்படுத்தும்.

பண்டித அ. கந்தசாமிபிள்ளை,

குடந்தைக் கல்லூரி விரிவுரையாளர்.

சிவமயம்

திருக்குடந்தைப் புராண வசனம்

பாயிரம்

ஆதி விநாயகர்

பூமேவு தமதருளா லுயருமுயர்
    விலதுமெனப் புவனங்கூறும்
மாமேவு மொழிக்கிளையா வுயர்திணையின்
    அஃறிணைமா வதனம் கொண்டோர்
பாமேவு முறையிணைந்து மருளமைந்து
    பயில்வதுபோல் பயிலா தென்றும்
தாமேவும் அருளமைந்த ஆதிவிநா
    யகர்சரணம் சார்ந்து வாழ்வாம்.

நூற்பயன்

மறுமையி லிந்திராதி பதமெலாம் புக்காங்
கறுதியில் போகந் துய்த்தே யளப்பருங் கயிலாயத்து
நிறுவிய மேலாமுத்திப் பதமொரு மூன்று நீத்துத்
தெறுவினை யாளராகிச் சிவனொடு கலந்து வாழ்வார்.

ஆதிகும்பேசர்

பூமேய வாரணனும் நாரணனும் வாரணனும் பொற்பூ மாலைத்
தேமேய விண்ணவரும் நண்ணவரும் பதமுதலாம் சிறப்பு நல்கி
மாமேய குடமுக்கி னிடமூக்கின் பார்கருணை வடிவின்மேய
பாமேய புகழாதி கும்பேசர் தாமரைத்தாள் பணிந்துவாழ்வாம்

மங்களநாயகி.

திருக்கைடயிட்த் தெழுந்துலகம்
சிறிதுபுரி பெருவெள்ளந் திவலையாகித்
தருக்கையொழிந் திடவளவில்
பெரும்புவனத் துயிர்ப்பயிர்கள் தழையவாழு
மிருக்கைவிழிக் கடையாக்கொண்
டெழுகருணைப் பெருவெள்ள மெங்கும் போர்ப்ப
வருக்கைமிளிர் குடந்தையமர்
மங்களநாயகிமலர்த்தாள் வணங்கி வாழ்வாம்.

குமாரக்கடவுள்.

நீர்முதல்யா முதல்என்று நெடியோனு
தியரென்று நிகழ்த்தா வண்ணம்
சூர்முதலே திகள்சிறிதும் வடுச்செய்யாத்
தன்கரத்தின் துணைப்பூந்தாளிற
பார்முதலாக் குநன்றலையு மவன்முதலோர்
முடியும்வடுப் படுத்த நோக்கி
நார்முதனெஞ் சிருவர்முலை நிறம்புயத்துஞ்
செய மகிழ்வே ணமையாள் வானே.

தண்டீசநாயனார்.

ஆதிநிலை யுண்டாக்குதலின் அம்போருகமே லவன்றண்டாய்
நிதிமருவப் பசுவோம்பு நிகழ்ச்சியால் மாயவன் றண்டாய்
மோதியொரு வேதிய னுயிரை முடித்தலால் கூற்றுவன்
[றண்டாய்ச்
சோதி வயங்குமொரு தண்டஞ்சுமந்தாரடிகள் தொழுதெழுவாம்

பாயிரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

(திருமந்திரம்)

தலம்.

சடந்தந்த வுடல்விடிற் றாரகப் பிரமஞ்சொல்
தம்பிரான் காசியெய்தித்
தரளமெறி யுந்தரங் கக்கங்கை விண்ணுறு
தாம்படிய வலியிலாத
இடங்கொள்தென்பூமண்ட லத்துளோ ரெல்லாரும்
எளிதாக மூழ்கவே பன்
னீராண்டி னுக்கொரு தரங்கயிலை நாயகன்
எம்பிரா னும்பர்கோமான்
மடந்தைபா கன்சடா டவியில்வாழ் கங்கைநதி
வாணிகா ளிந்தியாதி
மாநதிக ளாங்கோடி தோழியர்க ளுடன்வரு
மாமகத் தீர்த்தமென்னும்
தடந்தந்த புகழ்சேர்கு டந்தைமா நகர்முருக
சப்பாணி கொட்டியருளே
சம்புசிவ சங்கரன் கும்பநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே.

— க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்,

யாதொருதலத்து மான்மியங்கேட்டா
லிகபரமுத்திமுற் றெய்து
மோதொருகும்ப கோணமத்தலமென்
றுணருமினுலகமுன் றீன்ற
மாதொருபாகன் வயங்குமத்தலத்து
மான்மியமுணர்தரா மாக்கள்
காதொருதொழில்செய் மாக்களே புவியிற்
கழிதராப்பாரமே யன்றே.

பரிந்துதாமெடுத்த வுடம்பினலடையும்
பயனடையாருமா யுயர்ந்தோர்
தெரிந்துநீரசன காதகரென்னச்
செத்தவராவரா லிருந்தும்
புரிந்துகேட்பவர்கண் மறையெல்லாங்கேட்ட
புண்ணியப்பெரும்பய னடைவார்
விரிந்துபாரமருந் தீர்த்தங்களனைத்தும்
விதிப்படிதோய்ந்தவ ராவார்.

உ

திருச்சிற்றம்பலம்

மகாமக விளக்கம்

கும்பகோணம் மகா க்ஷேத்திரத்திலே பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை மகாமகம் வருகிறது. இதனை **மாமாங்கம்** என்றும் சொல்லுவார்கள். இதுபோலவே ஆந்திர நாட்டில் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுவதற்கு புஷ்கரம் என்று பெயர். இதைப் போலவே, வடக்கில் பிரயாகையில் நடக்கும் உற்சவத்திற்குக் கும்பமேளா என்பர். அகலாபாத்தே பிரயாகை என்பது கங்கை, யமுனை, சரஸ்வதி கூடும் இடம், இதற்குத் திரிவேணி என்றும் பெயர். நமது நாட்டில் அர்த்தோதயம், மகோதயம் முதலிய உற்சவங்களும் பலப்பல ஆண்டுகளுக்குப்பின் வருவன. கிரஹங்களின் சேர்க்கையாலே ஏற்படுவது. கும்பமேளா நூற்று நாற்பத்து நான்கு (12 × 12) வருடங்களுக்குப்பின் வந்தது. அது சென்ற 14—1—54-முதல் 3—3—54-வரையில் நடைபெற்றது.

இவ்வருடம் அதாவது மன்மதஆண்டு மாசித்திங்கள் 13-ம்நாள் சனிக்கிழமை (25--2--55) கும்பகோணத்தில் மகாமகம் வருகிறது. முதற்பதிப்பில் 15-வது மகாமக

தீர்த்தப் படலத்தில், துன்முகி ஆண்டு வரும் என்றும் குருவின் அதிசார வக்கிரத்தினுல் ஒரு ஆண்டு முன் பின் வருமென்றும் எழுதியுள்ளேன்.

பிரகஸ்பதி சிம்மராசியிலும், சிம்ம ஸ்தானதிபதி சூரியன், தன் மகன் சனி வீட்டிற்குள் ஏழாமிடமாகிய கும்பராசியில் நின்றும், பௌர்ணமி கூடிய மக நட்சத்திரத்தில், சந்திரன் குருவுடன் சேரவும், குருவும் சந்திரனும் சூரியனையும், சூரியன், குரு சந்திரன் இருவரையும் பார்க்கும் நாளே மகாமகம். ஆகையால், இவ்வருடம் குரு சிம்மராசியில் இருப்பதாலும், அடுத்த ஆண்டு கன்னியா ராசிக்குப் பிரவேசிப்பதாலும் பன்னிரண்டாண்டு முறைதவறி ஒரு வருடம் முன்னதாக வருகிறது. இது சாத்திர சம்மதமே.

புராண வரலாறு.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

— தாயுமான சுவாமிகள்.

சத்தியலோகத்திலே பொன்மயமாக விளங்கும் சபா மண்டபத்தின் முகப்பிலே, நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிங்காதனத்தின்மேல் வீற்றிருக்கும் பிரம்மதேவரை முன்னுளில் அநேக முனிவர்கள் "ஏ! தயாபர மூர்த்தியே! எங்களுக்குத் தவம்புரிய நல்ல தலம் அருள்வாய்" என்று வேண்டினர். அவர் தருப்பையை எடுத்துச் சக்கரமாகச்செய்து நிலத்தில் உருட்டி, இது தங்கும் இடமே சிறந்ததென்றார். அது காசிக்கு வடகிழக்கில் தங்கியது.

அங்கு அவர்கள் தவமும் யாகமும் செய்துகொண்டிருந்தனர். சவுனக முனிவர் ஒரு பெரும் யாகம் செய்யக் கருதினர். இதைப்பார்க்க அநேக முனிவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். சூதமாமுனிவரும் அங்கு எழுந்தருளினர். முனிவர்கள் எல்லோரும் அவருக்குப் பற்பல உபசாரம்செய்து போற்றி, "எங்களுக்கு எப்பாவத்தையும் போக்கி, எண்ணிய எண்ணியாங்கு நடைபெற ஒரு நல்ல தலத்தைத் திருவாய் மலர்ந்து அருளல் வேண்டும்" என்று வேண்ட, அவர் ஒரு முகூர்த்தகாலம் யோகத்தில் அமர்ந்து தலம் தீர்த்தம் மூர்த்தி விசேடமுற்ற கும்பகோண க்ஷேத்திரத்தைக் கண்டனர். உடனே அவர் முனிவர்களை நோக்கி, இத்தலத்தின் மகிமையை விரிவாகக் கூறினர். அன்றியும், அன்போடு கேட்போருக்கு இதை உரைக்குமாறு அருளினர். நைமிசாரண்ய மகரிஷிகள் மகிழும்படி இத்தலத்தின் மகிமையை வடமொழியில் அருளிச்செய்தார். இதைத் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் "திருக்குடந்தைப் புராணம்" என்று பெயரிட்டுச் செய்யுள் ரூபமாக இயற்றியுள்ளார். அதன் சாரமாக 1932-ல் திருக்குடந்தைப் புராண வசனம் என்று பெயரிட்டு எழுதினேன். அது விரிவாகவும், ஆராய்ச்சிக் குறிப்போடும் உள்ளது. அதைச் சுருக்கியும், புதுக்கியும் விளக்கியும் இப்பொழுது எழுதியுள்ளேன். குற்றங்கள் மலிந்து கிடக்கும் என்பது என் எண்ணம். தல மகிமையைக்கருதிக் குற்றங்களைக் களைந்து, படித்து நன்கு புருஷார்த்தங்களையும் அடைந்து உடம்பின் பயனைப் பெறுவார்களாக.

1. தலவிசேடப் படலம்.

விடமூக்கப் பாம்பேபோல் சிந்திநெஞ்சே வெள்ளேற்ருன் தன் தமரைக்கண்டபோது, வடமூக்கமாமுனிவர் போலச்சென்று, மாதவத்தார் மனத்துள்ளார் மழுவார் செல்வர், படமூக்கப் பாம்பணையிற் பள்ளி யானும் பங்கயத்து மேலயனுங் பரவிக்காணுக், குடமூக்கே குடமூக்கே என்பிராகில் கொடுவினைகள் தீர்ந்துஅரனைக் குறுகலாமே.

— அப்பர்.

குடகமலையின்கண்ணே தோன்றி "வான் பொய்க்கினும் தான் பொய்யாது" பல நிறப் பூக்களாகிய போர்வையைப்பெற்று இரண்டு பக்கங்களிலும் அலையாகிய கரங்களால் வாரிப் பொன்னையும், மணியையும் கொழித்துப் புனல்பெருகிவரும் காவேரி பாய்தலானே வேலியாயிரம் விளைவையுடைத்தாய், வளத்தால் சிறப்புற்று விளங்குவது இத்தெய்வத் திருக்குடந்தைமாநகரம். மான், மழு, சதுர்ப்புஜ, காளகண்ட, திரிசூல, திரிநேத்திரதாரியாய் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் தாமே இவ்வுலகமெங்கணும் அனந்த மூர்த்திகளாகவும், அனந்த தலங்களாகவும், அனந்த தீர்த்தங்களாகவும் வகுத்திருக்கின்றனர். உலகில் ஜோதி என்றும், ஸ்தலங்கள் என்றும் இரண்டுண்டு. இவற்றுள் ஜோதியாவன:- வேதம், ஆகமம், புராணம், ஆசாரியர், யோகிகள், மந்திரம், சூரியன், அக்கினி, விபூதி ஆகிய இவைகளேயாம். இவற்றிலும் அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கிருர். ஸ்தலமாவன:- காசி, திருவண்ணமலை, சிதம்பரம், குடந்தை, திருவையாறு, மதுரை முதலிய ஸ்தலங்கள் அனந்தம்.

இவைகளிலும், சாக்ஷாத் சிவபெருமான் வாசஞ்செய்கிறார். சிவாலயங்கள் ஒரு ஆயிரத்தெட்டு. அவற்றுள், நசித்துப்போனதுபோக எஞ்சியுள்ளது முந்நூற்று முப்பத்தெட்டு. இத்தலங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்து விளங்குவது கும்பகோண மகா க்ஷேத்திரமேயாகும். ஏனெனில், சிருஷ்டி பீஜமுற்ற கும்பம் தங்கி இதிலிருந்து உலகமே உண்டான காரணத்தினாலேயாம். இத்தலத்தில்வாசஞ்செய்யின்எல்லாத் தலத்தினும்வசித்த பலனை அடைவர். ஒற்றைக்கொம்பை உடைய விநாயகர் சிவபெருமானை ஒருமுறை வலம்வந்து கடலால் சூழப்பட்ட இப்பெரிய பூமியை வலம் வந்ததாக உரைத்து முழுப்பலன் பெற்றவாறுபோல, ஒரே தினத்தில் எல்லா தலங்களையும் சென்று வணங்கி அளவற்ற புண்ணியங்களைப்பெற எண்ணமுடையவர்கள் குடந்தைத் தலத்தைத் தரிசித்தமாத்திரத்திலே அப்பலன் முழுவதையும் ஒருசேரப்பெறுவார்கள். இத்தல மான்மியம் ஒன்றைக் கேட்டாலே இகபரமுத்தி சித்திக்கும். நாம் எடுத்த உடம்பின் பயன் இதுவே. இல்லாவிடில், பூபாரமே ஒழிய வேறில்லை. இத்தல மான்மியத்தை அன்போடு வாசிப்பவர், கேட்பவர், எழுதுபவர் முதலிய யாவரும் கொலை, களவு, குரு நிந்தை, பொய், கள்ளுண்டல் முதலிய பஞ்ச மகா பாதகங்களும், ஸ்திரீ ஹத்தி, கோஹத்தி, சிசுஹத்தி முதலிய அளவற்ற தீவினைகளும் நீங்கப்பெற்று, அழகு, குணம், ஆயுள், குலம், சம்பத்து, வித்தை, வாகனம், தனம் என்கிற அஷ்ட பாக்கியங்களையும், புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, திரு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் எனும் பதினாறு பேறுகளையும் கிடைத்தற்கருமையான இந்திர விஷ்ணு பதவிகளையும்

பெற்று இறுதியில் சிவலோகஞ்சேர்ந்து இனிது வாழ்வர். அல்லாமலும், வேதங்களை யெல்லாம் கேட்ட பலனையும் பூலோகத்திலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் தோய்ந்த பலனையும், அரும் பெரும் யாகங்களையெல்லாம் செய்த பலனையும், எல்லா ஸ்தலங்களிலும் சென்று சிவபெருமானை வழிபட்டுப் போற்றிய பலனையும், ஒருங்கே அடைவர். கங்கையிலும் சிறந்ததாகிய காவிரி இத்தலத்தின்வழியாக ஓடுகிறது. இத் தீர்த்தங்களில் விதிப்படி மூழ்கினோர் பரிசித்தோர், பருகினோர் யாவரும் பஞ்சமா பாதகங்கள் நீங்கப்பெற்று இன்புறுவர். காவிரியோடும் ஸ்தலங்களில் கும்பகோணம், மாயூரம், சங்கமம் என்னும் மூன்றுமே விசேஷமானவை. இவற்றுள் சங்கமத்தில் மாயூரம் விசேஷமானது. மாயூரத்திலும், கும்பகோணம் மகா விசேஷமானது. இத்தலத்தில் காவிரிக்கரையில் காசிப தீர்த்தம், சக்ரதீர்த்தம், பகவத் தீர்த்தம், குரத்தீர்த்தம், மதங்கமாமுனி தீர்த்தம் என பஞ்ச தீர்த்தங்களுள்ளன. இவைகளில் விதிப்படி தரிசிப்போர், பருகுவோர், முழுகுவோர் முதலியவர்கள் எல்லாப் பலனையுமடைவர். கணக்கற்ற ரிஷிகள், முனிவர்கள் முதலிய பலரும் இத்தெய்வ கும்பகோணமுற்றுத் தவமியற்றிப் பேரின்பம் அடைந்து இன்புற்றனர். அதன்றியும் பன்னிரண்டாண்டுக்கு ஒரு முறை குருபகவான் சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் மாசி மாதத்தில் மகாமகத்திலும பௌர்ணமியிலும் முறைப் படித் தீர்த்தங்களில் மூழ்குவோர் நூறு கிருச்சிரப்பலனைப் பெறுவர். "கிருச்சிரம்" என்பது சாந்தபன விரதம். அதாவது பஞ்சாமிர்தத்தோடு ஆறுநாளுண்டு ஏழாவது நாள் உபாசித்தல். தீர்த்தக்கரையிலிருந்து தினையளவு தான தருமம் செய்தவர்கள் மேருமலையில் பதினாயிரம் யாகங்கள் செய்த பலனை அடைவர். தீர்த்தப் படிகளைப்

புதுக்குவோரும், சேறு அள்ளுவோரும் சிவலோகம் பெற்று இன்புற்று வாழ்வர். இதன்றியும், ஆதிகும்பேசர், சோமேசர், நாகேசர், ஆதிவிசுவநாதர், விசுவநாதர், அபிமுகேசுவரர், கௌதமேசுவரர் பாணபுரீசர், கைலாசநாதர், சாரங்கபாணி, சக்கரபாணி, வராகர், முதலியவர்கள் சிறக்கவே அமைந்து விளங்குகிருர்கள். எத்தலத்திலுமில்லாத பிரமன்கோவிலும் இத்தலத்தில் விளங்குகிறது. ஒரு கணமேனும், அரைக்கணமேனும் வியாபாரத்தின் பொருட்டாலும், விலைமாதர்களின் ஆசையாலும் இத்தலத்தில் தங்கினுல் குற்றமற்ற அநேக தலங்களில் வசித்த புண்ணியத்தைப் பெறுவர். இதில் வசிக்கும் விருட்சம், கொடி, பறவை, மிருகம், புழு முதலிய பலவும் சுவர்க்கமுற்றிடும். கொடிய யமனும் தனக்கு இந்நகரத்தில் அதிகாரமில்லை என்று பலகாலும் கூறுகிருன். இத்தலத்தை வலம் செய்தவர்கள் பூமி பிரதட்சணம் செய்த பலனை அடைவர். கும்பேசரை வழிபட்டோர் ஆயிரம் சிவலிங்கங்களை வழிபட்ட பலனை அடைவர். பூமியிலே செய்த பாதகமெல்லாம் சிவத்தலத்தொழியும். சிவத்தலத்து பாதகமெல்லாம் காசியில் தீரும். காசியில் செய்த பாதகமெல்லாம் குடந்தையில் தீரும். குடந்தையிலியற்றிய பாதகமெல்லாம் இக்கும்பகோணமே தீர்க்கும். இத்தலத்தில் எள்ளளவு தானம் செய்யினும் மேரு அளவாகிய பலனை அளிக்கும். கன்னிகாதானம் செய்தவர்களும், கனி, காய் தானம்செய்தவர்களும் வேண்டிய இன்பமடைந்து இன்புற்று வாழ்வர். வேதத்தை மறந்த வேதியரும், நாட்டை இழந்த அரசரும், பொருளை இழந்தவரும் தீர்த்தமாடி ஆதி கும்பேசரைப் போற்றின் திரும்பப் பெறுவார்கள். புத்திரபாக்கியமில்லாதவர்களும் புதல்வரைப்பெற்று இன்புறுவார்கள். நோயாளிகளும் பிணிகள்

நீங்கிச் சுகமடைவார்கள். இத்தலத்திற்கு கும்பகோணம் திருக்குடந்தை, குடமூக்கு, பாஸ்கர க்ஷேத்திரம் என நான்கு பெயருண்டு. சுருங்கச்சொல்லின், இத்தலத்தில் விதிப்படித் தீர்த்தமாடி ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ ஆதி கும்பேசர் முதலிய பலரையும் அன்போடு போற்றுபவர் கள் அடையும் பயன் எழுதும் திறமன்று. அமிர்தக் கலசத்தினின்றும் பொங்கி எழுந்த அமிர்தம் நாலாபக் கங்களிலும் சுற்றிக் கோணமாக வந்ததினால் கும்ப கோணம் என்றும், மடப்பத்தை உடையவள் மடந்தை என்பதுபோல கும்பத்தைக் இடமாகக் கொண்டிருப்ப தால் குடந்தை எனறும், பரமசிவன் குடமூக்கில் மணலை யும் அமிர்தத்தையும் சேர்த்துவைத்து லிங்கமாக பூசை செய்ததினால் குடமூக்கு என்றும் மலையாவது அல் லது நதியாவது அடுத்துள்ள க்ஷேத்திரத்தில் பிர்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மூவருமிருந்து சூரியனால் இவர் கள் பூசிக்கப்பெற்றால் இதற்குப் பாஸ்கர க்ஷேத்திரம் என்று பெயர். இத்தலம் இவ்வாறு இருப்பதால் இது வும் பாஸ்கர க்ஷேத்திரமே. கும்பகோணம், குடந்தை இவை குடமூக்கின் மரூஉ என்று சிலர் கொண்டனர். இது ஆராய்ச்சிக்குரியது.

ஆழ்வார்கள் இத்தலத்தை பின்வருமாறு புகழ்ந் திருக்கின்றனர்,

எங்கள் பெருமான் இமையோர் தலைவன்நீ
செங்கண் நெடுமால் திருமார்பா — பொங்கு
படமூக்கின் ஆயிரவாய்ப் பாம்பணைமேற் சேர்ந்தாய்
குடமூக்குக் கோயிலாக் கொண்டு.

தீராவினைகள் தீர என்னை
ஆண்டாய் திருக் குடந்தை
ஊரா உனக்கு ஆட் பட்டும்
அடியேன் இன்றும் உழல்வேனே

— நம்மாழ்வார்.

நடந்த கால்கள் நொந்தவோ
நடுங்கஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ
விலங்குமால் வரைச் சுரம்
கடந்த கால் பரந்த
காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்த வாறு எழுந்திருந்து
பேசு வாழி கேசனே.

— திருமழிசை ஆழ்வார்.

மூர்க்கநாயனார்.

இருளாரும் மணிகண்டர் அடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாயம் எய்துதற்குப் புகழ்குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூதாடி உறுபொருள்வென் றனநம்பர்
அருளாக வேகொண்டங் கமுதுசெய்வித் தின்புறுவர்.

— சேக்கிழார்.

அறுபத்து மூன்று நாயனாருள் ஒருவராகிய மூர்க்க நாயனார் அடியார்களுக்கு அன்னமளிப்பதில் சிறந்தவர். சிவபெருமானிடத்தில் வற்றாத அன்பு பூண்டவர். சூதாடும் தொழிலை யுடையவர். இத்தலத்தில் சூதாடிவென்ற பொருளை அடியார்களுக்கும் அமலனுக்கும் தான்கொண்ட பணியை பன்மடங்கு அதிகமாக இயற்றிவந்தார்.

இத்தலத்தை "நாற்றிசையோர் பரவு திருக்குட மூக்கு" என்றும் சேக்கிழார் மிகப் பாராட்டிப் புகழ்ந்துள்ளார்.

முந்நாளில் பகவன், கௌதமர் முதலிய முனிவர்களும், இந்நாளில் ஆட்டுக்குட்டிச் சுவாமிகள் மௌன சுவாமிகள், சச்சிதானந்த சுவாமிகள், பாடகச்சேரி சுவாமிகள் மனமுவந்து வாழ்ந்து, சிவனடி பெற்றுர்கள் என்ருல், இத்தெய்வப் புனிதத் தலத்தின் அருமை பெருமைகளை எம்போலியர்களால் உரைக்குந்திறமோ? ஆழ்வார் காலநிலை என்னும் நூலில், மதுரை ஶ்ரீராகவ ஐயங்கார் அவர்கள் குடந்தைப் பகவரை வைணவத் துறவி என்று கூறியுள்ளார். பகவன் என்பதற்கு அஷ்ட ஐஸ்வரியம் உடையோன். எட்டு குணமுடையோன், எட்டுருவினன் என்று பொருள்படும். இவர் சைவ முனியே, இவர் ஆலயம் நாகேச்வரர்கோயில் உட்பிரகாரத்தில் வடமேற்கு மூலையிலும், மடத்துத் தெருவில் பகவத் விநாயகர் என்று ஓர் ஆலயமும் உள்ளன. காவிரியில், பகவத் தீர்த்தத்தில் நடுவில் நீராழி மண்டபத்தில் பகவர் உருவமும், பக்கத்தில் நந்தியெம்பெருமானும் விளங்குகிருர்கள். இவர் சைவ முனியே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

2. திருவிடைமருதூர் படலம்.

திருவிடைமருதூர், திருநாகேசுரம், தாரேச்சுரம், சுவாமிமலை, பாடலவனம் ஐந்தும் ஐங்குரோசத்தலம் எனப்படும். இது கும்பகோணத்திற்கு வடகிழக்கிலுள்ளது. இதில் விபண்ட முனிவர் சிவபிரானைக் காண எண்ணி நெடுநாள் தவம்செய்து, அவர் பார்வதி சமேதராக தை மாதம்

பௌர்ணமி பூச நட்சத்திரம்கூடிய தினத்தன்று காட்சி கொடுத்து "வேண்டுவது என்ன" என்றார். "வருடந் தோறும் தைப்பூசத்தன்று காவிரிக்கரையிலுள்ள கல்யாணத் தீர்த்தத்தில் மூழ்கினவர்கள் பாவம் நீங்கி இன்புற்று வாழவேண்டும். இத்தலத்தில் எந்நாளும் மகாலிங்கத்தோடு இருத்தல் வேண்டும். போற்றுபவர்களுக்கு காட்சி தந்து இன்பம் அளித்தல் வேண்டும்" என்றார் முனிவர். அவ்வாறே அருளிச்செய்தார். விநாயகர், உமை சிவபெருமானைப் பூசித்துள்ளார்கள்.

காசிபமுனிவர் பாலகிருஷ்ணனைக்காண 12-வருடம் தவம்புரிந்தார். அவர் அவருக்கு மருதமரத்தடியில் காட்சி கொடுத்தார். இக்காரணம்பற்றி இதற்கு திருவிடை மருதூர் என்று பெயர் பெற்றது. பிரமஹத்தியைப் போக்கும் தலம். இங்கு தீர்த்தமாடி சிவபெருமானைப் போற்றிப் பலன் அடைவோமாக.

3. திருநாகேசுரப் படலம்.

திருக்குடந்தைக்குக் கிழக்கே உள்ளது. இதற்குச் சம்பகாரண்ணியம் என்றும் ஒரு பெயருண்டு. நாக தீர்த்தமுள்ளது. கார்த்திகை மாதத்தில் ஞாயிற்றுக் கிழமையில் நீராடி, நாகேசுவரரை வணங்கினால் இஷ்ட சித்திப்பெற்று சிவலோகம் சேர்வர். வாசுகி தீர்த்தத்தில் மூழ்கி, முதல் யாமத்தில் நாகேசுவரரையும், இரண்டாம் யாமத்தில் சமீவனேசுவரரையும், மூன்றாம் யாமத்தில் புன்னாகவனேசுவரரையும், நாலாம் யாமத்தில் பாதாலத்துப்புகுந்து நாகேசுவராதி மூவரையும் போற்றி முத்தி

பெற்றூர்கள். மார்க்கண்டேயன் சிவனை மனதில் உன்னி நன்மகளைக்குறித்து "உப்பிலா உணவுண்டு" ஆயிரம் வருடம் அருந்தவமியற்றினுன். மனமகிழ்ந்து நிலமகளும், புதல்வியாகும்படி அருள் புரிந்தார். மங்கைப் பருவம் அடைந்ததும், மறுபடியும் நாகேசுவரரை வழிபட, அவர் நெடுமாலைநோக்கி மணப்பூண்டு இத்தலத்தில் அமருமாறு கூறினூர். நெடுமால் கிழவடிவம் பூண்டு அங்குத் தோன்றினூர், மார்க்கண்டேயர் "பசித்து வந்தீர், உடலும் மெலிந்திருக்கின்றீர், பசியாறுமென்று உப்பிலா உணவு உண்ணவேண்ட" எதுவாகிலும் அன்போடளித்தால் உண்பேன் என்று கூற, என்னிடம் உள்ளதை அன்போடளிப்பேன் என்று விடையளிக்க, நின்மகளை எனக்கு அன்போடு கொடுதி என்றூன். உப்பிலா உணவை உண்டான். காளையாகித் துளசிமாலை முதலிய அடையாளங்களோடு நின்றனன். மாயோன் மணமுடித்து உப்பிலிமாயனுக விளங்குகிறுன். இதற்கு **உப்பிலியப்பன் கோவில்** என்று பெயர். இதற்குத் திருமங்கையாழ்வார் விண்ணகரம் என்று கூறியுள்ளார். ஒப்பார்-இல்-அப்பன் என்பது ஒப்பிலா அப்பன் என்று மருவிற்று என்பர் சிலர்.

4. நரரேச்சுரப் படலம்.

இத்தலம் கும்பகோணத்திற்கு மேற்கே ஒரு குரோசதூரத்திலுள்ளது. இதில் பரமசிவனுல் ஸ்தாபிக்கப்பட்ட ருத்திராக்கவனம் ஒன்று உண்டு. முப்பத்து முக்கோடி தேவர்களும் இலைகளாகவும், இருடிகளும் கந்தர்வர்களும் பெரிய கிளைகளாகவும். கின்னரர்கள் சிறு கிளை

களாகவும், விசுவதேவர்கள், சாத்தியர்கள், வசுக்கள், மருத்துக்கள், அவ்விருக்கத்தின் பட்சிகளாகவும், ஆணி வேர் பிரமனுகவும், பன்னிரு சூரியர்களும், சுற்றுவேர் களாவும், தேவமாதர்கள் அம்மரத்தின் பட்டையாகவும் வந்துசேர்ந்து, அதில் என்றும் வாசஞ்செய்துகொண் டிருந்தார்கள். அந்த விருட்சத்தின் அடியில் பிறப்பிறப் பிலியாகிய பரமசிவன் என்றும் பிரகாசித்துக்கொண் டிருக்கிறுர். முனிவர்களால் சாபமிடப்பட்டு வருந்திய யமன், இத்தலமுற்று சிவனைப் பூசித்துச் சிவ சூலத்தால் தீர்த்தத்தைப் புதுக்கி, இதற்கு யம தீர்த்தமெனப் பெயர் கொடுத்து, ஆவணி மாதம் அசுவதி நட்சத்திரத்தில் உற் சவம் தொடங்கி ஒன்பது தினம் உற்சவம் நடாத்தி மக நட்சத்திரத்தில் இத்தீர்த்தத்தில் தீர்த்தமளித்து, பதினு யிரம் வருடம் தவம்புரிந்து சாப நீங்கப்பெற்று, பல வரங் களையும் பெற்று, முக்திபெற்றுன். சூரசேனன் ஒரு மறையவனைக் கொன்ற பாவம்நீங்க, இங்குற்ற சிவனை வழிபட்டு அன்னதானம்செய்து பாவம் நீங்கி, நன்னகர் அடைந்து முக்தனுனன். ஒரு மறையோன் முன் வினை யால் முகலகநோய் உற்று வருந்தியவன் இங்குற்று தீர்த்த மாடிப் பரமனைப்பாடி தான தருமங்கள் செய்து நோய் நீக்கப்பெற்றுன். சுபுண்ணியன் எனும் பிராமணன் இரு மனைவியை அடைந்து அதனுல் ஏற்பட்ட சாபத்தை இத் தலமுற்று அன்னதானம்செய்து பாவம் நீங்கப்பெற்றுன். சூரியன் கள்ளுண்டதினுலுண்டான பாதகத்தை இங்கு வந்து அன்னதானம்செய்து நலம் பெற்றுன். ஐராவதம் துருவாச மகரிஷி கொடுத்த சாபத்தால் நீல நிறமுற்ற தை இங்குற்று சிவபெருமானைப் போற்றி முன்னிற மடைந்தது. இதனுல் இது ஐராவத நகரென்றும் இந்த லிங்கம் ஐராவதேச்சுரர் என்றும் பெயர் வழங்கலாயிற்று.

இக்கோயில் சுமார் எண்ணூறு ஆண்டுகட்குமுன் இரண்டாவது ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. இதனால் ராஜராஜேஸ்வரபுரம் என வழங்கி, இப்பொழுது மருவி தாராசுரம் என வழங்கப்படுகிறது.

தாரகன் பூசைசெய்ததாக ஒரு வரலாறு காணப்படுகிறது. சிலர் ஐயுறுகின்றனர். மாடக்கோயில். தெற்குப் பிரகாரத்தில் விஷ்ணுவைச்சம்கரித்த சரபமூர்த்திவிளங்குகிறார் அம்மன் கோவில் வடக்கே தனியாகவும். இதற்கு மேற்கில் வீரபத்திரசுவாமி கோவிலும் இருக்கின்றன. நாயன்மார்களின் கற்சிலை திருவுருவங்கள் பிரகாரத்தின் சுவற்றில் வைத்து கட்டப்பட்டிருக்கின்றன.

---

5. சுவாமிமலைப் படலம்.

இத்தலம் கும்பகோணத்திற்கு மேற்பால் ஒரு குரோச தூரத்திலுள்ளது. இதற்கு குருகிரி என்ற பெயருண்டு. பிர்மா, விஷ்ணு, ருத்திரன், தேவர்கள் முதலிய யாவரும் விரும்பி வசிக்கத்தக்கது. அங்கஹீனமுற்றவர், நோயாளிகள் முதலிய யாவரும் இத்தலமுறின் யாவும் நீங்கி இன்புறுவர். வழிப்போக்கர்கள் இத்தலவழியாகச் சென்றாலும், களைப்புற்று இங்குச் சிறிதுநேரம் தங்கினாலும் பெரும் பயன் பெறுவர். இக்குருகிரியைப் பிரதட்சணஞ் செய்வோர் சகல துன்பமும் நீங்கப்பெற்றுச் சிவலோகஞ் சேர்வர். குருபரனைப் போற்றிச்சிவத்தை வழிபடுவோர் எத்தகையினராயினும் இம்மையில் அளவிலாச் செல்வம் பெற்று, மறுமையில் வீட்டின்பம் அடைவர். கார்த்திகைப் பௌர்ணமியில் அருளே உருவாகக்கொண்ட சாமீ

நாதனை அன்புடன் போற்றுபவர் இகபர இன்பத்தை இடைவிடாது அனுபவித்துவாழ்வர். சித்திரைமாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் அங்கப்பிரதட்சணம் செய்வோர் விரும்பியதை விரும்பியபடி பெறுவர். வைகாசி, தை மாதங்களில் பௌர்ணமியில் இவனுற்றுப் போற்றுபவர் வினையெலாம் தீர்ந்து முக்தராய் உடம்பினைப்பெற்ற பலனையடைவர்.

நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் தைப்பூசத்தன்று இங்குற்றுப் பூசித்து சிறப்பெய்தினரென்ருல், இதன் பெருமையை உரைக்கவல்லார் யார்? குருகிரி யாத்திரை செய்ய எண்ணங்கொண்டு பெயர்த்து வைக்கும் அடியொன்றுக்கு ஒரு அசுவமேத யாகஞ் செய்த பலனையடைவர். இங்கெழுந்தருளியிருக்கும் குமாரக்கடவுளை அன்பால் வாழ்த்தி, குமார தீர்த்தமாடுவோர் சகல செல்வமும்பெற்று புத்திர சம்பத்துடன் வாழ்வர். கேகயநாட்டு மன்னன் சிவத் துரோகஞ்செய்த பாதகத்தால் வாதநோயுற்றுப் பெருங்கவலையடைந்து வருந்தியுழன்று வாழுநாளில், காபாலி முனிவர் வார்த்தையால் தைப்பூசத்தன்று குருகிரியுற்று வலம்வந்து குமார தீர்த்தமாடி குமாரக்கடவுளைப் பூசித்து நோய் யாவும் நீங்கப்பெற்று மிக மகிழ்ச்சியுற்றுத் திருப்பணிகள் பலசெய்து அதி பராக்கிரமசாலியான கார்த்தவீரியன் என்னும் மகனைப்பெற்றுத் தன்னகரடைந்து இனிது வாழ்ந்தான்.

அம்மலையின் படிகள் பிரபவாதி வருட தேவதைகளாகும். நாற்புறமும் இருது தேவதைகள் வசிக்கிருர்கள். மலையேறுவோர் சுவாமியைத் தியானித்தும், வருட தேவர்களைத் துதித்தும்,படிக்குப்படித்தேங்காய் உடைத்

தும், சுவாமிநாதனைத் தரிசித்து இறங்கி,கீழுள்ள சிவலிங்கத்தைப் பூசிப்பதால் நினைத்த பலன் அடைவார்கள்.

முருகன் குருவாக உயர் ஆசனத்தமர்ந்து, ஈசன் சிடனுகைக் கீழ்நின்று, கைகட்டி வாய்பொத்திப் பிரணவ உபதேசம் பெற்றார் என்பதற்குப் போதிய சான்று கந்த புராணத்தில் இல்லை. ஈசன் முருகனைப் பிரணவம் வருமோ என்று கேட்க, வரும் என்றும், பார்வதிக்கு உபதேசித்த போது கேட்டறிந்தேன் என்றும் கூறக் குழந்தையை மடிமேல் தூக்கிவைத்து செவிசாய்க்கக்கூறினான் என்பது கந்தபுராணக்கூற்று. இதுதான் கொள்ளத்தக்கது.

6. பாடலவனப்படலம். (கருப்பூர்)

இப்பழம்பதி கும்பகோணத்திற்கு வடகிழக்கில் ஒரு குரோச தூரத்திலுள்ளது. செல்வம் பெற நினைத்தாலும், குணத்தில் மிக மேன்மைபெற நினைத்தாலும், நான்முகன் ஆதியர் பதம்பெற நினைத்தாலும் இத்தலமடைந்து அன்போடுத்தீர்த்தமாடி சுந்தரேசனைப் போற்றினால் யாவும் சித்திக்கும். அவர்கட்கு யமவாதையில்லை. கடல் முழுதும் பானம்பண்ணின குறு முனிவர், பாதிரி மரத்தின் கண்ணே விளங்கும் சிவபெருமானைப் பூசித்து பெரும் பேறெல்லாம் பெற்றான் எனின் இதன் பெருமையை உரைக்கவல்லார் யார்? கில்லியர் என்பவர் சித்திரை மாதத்துப் பௌர்ணமியில் இங்குற்று மனம், வாக்குக் காயங்களுக்கு எட்டாத அண்ணலைப் பூசித்துச் சிவலோகம் பெற்றார். சுரதன் என்னும் ஒரு வேந்தன் பரமனைப்போற்றி நல்வரம் பெற்று பூமிமுழுவதுமாண்டு

தேவலோகம் சென்றான். இந்திரன் பேரன்பினால் நாடோறும் பூசித்துத் தேவேந்திரனாகி விளங்கி சிவன் நட்புண்டு இனிது வாழ்ந்தான். வங்கநாட்டுச் சோமகேது எனும் அரசன் குறுமுனி உபதேசத்தால் இத்தலமுற்று சிவலிங்கப்பிரதிட்டைசெய்துப்போற்றி நல்ல பராக்கிரமசாலியும் அதி விவேகியுமான உரோமனைப் பெற்றான். இங்கு பிரமதீர்த்தமொன்றுள்ளது. இதில் விதிப்படி மூழ்குவோர் பதினாயிரம் பவுண்டரிக யாகஞ்செய்தப் பலனைப் பெறுவர். இத்தலத்திற்குத் தென்பால் மாயோன் புன்னை வனத்து அமர்ந்துள்ளான். இந்த ஐந்து தலத்தையும் கும்பகோணத்திற்கு அங்கமென்று பெரியோர் கூறுவர். இத்துணைச் சிறப்பு வாய்ந்த ஐந்து தலத்தையும் எல்லையாக உடைய கும்பகோண மான்மியத்தைப் பரமனே கூறவேண்டுமே யொழிய எம்போலியர்களால் சொல்லும் தரமன்று. கும்பகோணமடைந்து போற்ற எண்ணமுடையவர் ஐங்குரோச யாத்திரைச் செய்தல்வேண்டும். இவ்வைந்து தலத்திலும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருநாள் தங்கித் தீர்த்தமாடிப் பரமனைப் போற்றல் வேண்டும். இவ்வாறு செய்பவர்கள் பெரும் புண்ணியமடைந்து இன்புறுவர் என்பது சான்றோர் துணிபு.

7. கும்போற்பத்திப் படலம்

பிரமதேவன் சீக்கிரத்திலே தினகற்பம் (உலகத்தை யழிக்கும் ஊழிக்காலம் பெருவெள்ளம்) வருவதைக் கருதி, சகல தேவர்களும் கொண்டாடத்தக்க கைலங்கிரியில், நவரத்தினங்களால் இழைக்கப்பட்டு ஜோதிமயமாக விளங்கும் திருவோலக்க மண்டபத்தில் திரிசூலபாணி

யாயும், கங்காதர மூர்த்தியாயும் விளங்கும் சிவபிரானைக் கண்டு முறையிட அக்கைலயங்கிரிக்குச் சென்றான். அங்கு நந்தியெம்பெருமானைக்கண்டு வணங்கி, அவர் விடை பெற்று உட்சென்று பலவகை இரத்தினங்களால் அமைக்கப்பட்ட சிம்மாசனத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பார்வதி சமேத பரமேசுவரனைக் கண்குளிரக்கண்டுத் தரிசித்துக் கண்குளிரப் போற்றி, அஷ்டாங்கமாக நமஸ்கரித்து அங்கை கூப்பி, அழிவிலா ஆனந்தத் தேனே! அற்புதக் கூத்தா! என்று நாத்தடுமாற, உரோமாஞ்சிதம் பூப்பக் கண்கள் ஆனந்த பாஷ்பம்பொழிய அன்பினோடு பலவாறு நீடுதுதித்தான். அமலன் நான்முகனைநோக்கி "வந்தகாரியமென்"னென்று வினவலும், அதற்கவன், "தினகற்பம் வருதலாலே எல்லாம் அழிந்துறும். சிருஷ்டி பீஜமும் நசிக்கும். இனி எல்லாவற்றையும் முன்போல் எவ்வாறு சிருஷ்டிப்பேன். விண்ணப்பம் இதுவே" என்றார். இதைச் செவியுற்ற சிவபெருமான், "நீயும் நெடுமாலும் அழிவுற்றாலும், நாம்கொடுத்த சிருஷ்டி பீஜமோ என்றும் அழிவுறாது அதைக் காப்பாற்றுவோம் என்று திருவாய்மலர்ந்தருளியும், புண்ணிய தலங்களிலுள்ள மணலில் சிறிது சிறிது எடுத்துவந்து, அமுதத்தினால் நன்றாகப் பிசைந்து நமது மாயாமயம் என்னும் குடம் ஒன்று செய்து, அதில் அமுதம் வார்த்து, நாம் கொடுத்த எழுவகைத் தோற்றமும், நால்வகை பீஜமுமுள்ள எல்லா ஜீவன்களையும் தன்னுட்கொண்ட விதையாகியதுமாகிய சிருஷ்டி பீஜத்தை நடுவிலிட்டு. நாற்புறமும் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலியவைகளைப் பரவச் செய்து, தேங்காய், மாவிலை, பூணூல், வஸ்திரம், கூர்ச்சம், தருப்பை முதலியவைகளால் அலங்கரித்து, நீ வசிக்கும் மேருமலையின் தென்பால் சாய்தலில்லா உறியில்

வைத்து, அமிர்தத்திஞல் புரோக்ஷணஞ்செய்து, வில்வத்திஞல் அருச்சனையும் செய்யக்கடவாய். வெள்ளம் வந்து உலகமெல்லாம் அழியும்போது இக்கடம் மிதக்கும். இது தென்பால்சென்று கீழச் சமுத்திரத்திற்கு மேற்குத் திசையில் சுயமாகவே சென்று ஒரு தலத்தில் தங்கும். அப்பொழுது நாம் வேட வேடம்பூண்டு அம்பொன்ருல் அதைத் தகர்ப்போம். அதிலின்றும் அதி வேகமாகக் கிளம்பி ஐங்குரோச தூரம் பரவும். கடம் நின்ற இடத்திற்குக் கீழ்பால் ஒரு தீர்த்தமும் (பொற்ருமரை) அதற்குத் தென் கிழக்கில் ஒரு தீர்த்தமும் (மகாமகத்தீர்த்தம்) அமையும். அதிலுள்ள தேங்காய் முதலிய வஸ்துக்கள் விழுமிடங்களிலும் பதினெட்டு க்ஷேத்திரங்களிலும் லிங்க ரூபமாக உண்டாகும். கடம் உடைந்த இடத்தில் கிடந்த துண்டுகளையும் அமுதத்திஞல் நனைந்த மணலையும் ஒன்று சேர்த்து லிங்கமாகப் பிடித்துவைத்துப் பூசித்து அதிலே மறைவோம்" என்று திருவாய்மலர்ந்தருளிஞர். அவ்வாறே கும்பஞ்செய்துவைத்து பூசித்து சிவபெருமான் திருவடியையே எண்ணி இருந்தான்.

---

8. கும்பேசுரப் படலம்.

அரவிரி கோடல்நீடல் அணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலை சூழ்ந்த குழகன் குடமூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி இருந்தா னவன் எம்மிறையே.

— சம்பந்தர்.

நான்முகன் மேருமலையின்கண் அமர்ந்திருக்கும்நாளில் சப்த சமுத்திரமும் ஒருகடலாமாறு பிரளயமோ வந்துற்

றது. காற்றும் அதற்குத் துணையாகக் கிளம்பிச் சண்ட மாருதமாய்ச் சுழன்று சுழன்று வீசிற்று. சந்திர சூரிய நிலை எங்கும் காணவில்லை. பூமி முழுவதும் நீர் மயமாகவே இருந்தது. மேருமலை மூழ்கிற்று. தமிழ்நாடு சிறப்பெய் தக் கும்பம் அசைந்தது. கடம், தர்ப்பை உறியோடு வெள்ளத்தில் காற்ருே தென்திசை நோக்கி மேன்மேலும் அடித்ததனுல் கீழ்கடலுக்கு மேற்பால்செல்ல, அதன் மேலிருந்த தர்ப்பையும் மாலையும் ஓரிடத்தில்விழ, மாவிலை வன்னிமரமாகவும், தர்ப்பையே லிங்கமாகவும் முளைத்து அவிடம் சமிவனம் (திருப்புறம்பியம்) என்றும். அவ் விலிங்கம் சமீவனேசர் (தர்ப்பை லிங்கம்) எனவும், பெயர் பெற்றது. சப்த கன்னிகைகளும் இந்த லிங்கத்தை ஜல ரூபமாகச் சூழ்ந்திருந்தார்கள். கும்பமோ இவ்விடத் திற்கு ஒன்றரை குரோச தூரத்தில் செல்ல, இதுவே மகாக்ஷேத்திரம் என ஓர் அசரீரி உண்டாயிற்று. தேவர் கள் பூமாரி சொரிந்தார்கள். கும்பத்தைத் தொடர்ந்து வந்த பிரமன் அகமகிழ்ந்து இறும்பூதுற்றனன். வெள்ளி யக்கிரியில் ஸ்ரீ பார்வதி தேவியாரோடு வீற்றிருக்கும் ஸ்ரீ பரமசிவன் பார்வதி தேவியாரிடம் ஒரு காரியமாகச் சிறிதுபோழ்து போய் வருகிறேன் என்று கூறி, வேட வுருக்கொண்டுப் பூலோகத்தில் காசி முதலிய க்ஷேத்திரங் களையடைந்து, திருவிடைமருதூரின் கீழ்பாலடைய, கூட வந்த சாத்தனுர் தூணியில் கிடந்த அம்பொன்றை எடுத்து அமலன் கையில் கொடுக்க, அவர் இது அமிர்த கடத்தைத் தகர்க்காது என்று கூறி, அதைத் தானே அம்பில் தொடுத்துவிட்டனர். அது குடத்தைத் தகர்க்க வில்லை. சாத்தனுர் நாணமுற்ருர். இவருக்கு பாணை சாத்தர் என்றும். அவ்விடத்திற்குப் பாண பண்டுரை என்றும் பெயர்கள் வழங்கலாயின. அமலன் எழுந்து

சற்று மேற்கே சென்று, கடம் நின்ற இடத்திற்கு ஈசான்ய திக்கிலிருந்து குடத்தை நோக்கி ஒரு கணை தொடுத்தனர். அது விரைந்துசென்று குடத்தின் மூக்கைச் சிதைத்துக் கடத்தைக் கவிழ்த்தது. மூக்கு ஆகாயத்தில் கிளம்பித் தென்கிழக்கில் ஒருயோஜனை தூரத்தில் விழுந்தது. அவ்விடமே குடவாயில் என்றும், அங்கு தோன்றிய லிங்கமே கோணேசர் என்றும் பெயர்கள் வழங்கப்படும், இக்குடத்தினின்று அமுதம் நாற்புறமும் பரந்து ஐங்குரோசமளவும் சென்றது. வேடவுருக் கொண்ட சிவபெருமான் குடத்துக்கெதிர்சென்று, கிழக்கிலும், தென் கிழக்கிலும் பூமியில் இடங்கொடுக்குமாறு நினைத்தனர். பூமி இவ்வாறே விரிந்து இடங்கொடுக்க, அமிர்தம் இரண்டு இடங்களிலும் தங்கிற்று. கிழக்கே உள்ளது அமுதவாவி என்றும், தென்கிழக்கிலுள்ளது கன்னிதீர்த்தம் மகாமக தீர்த்தம் என்றும் பெயர்கள் பெற்றன. அமலன் அமுத கும்பத்தை அடுத்து, அமுதத்தினுலே நனைந்த வெண்மணலை ஒன்ருகச் சேர்த்துத் தன் கையால் ஒரு லிங்கம்அமைத்து, அதை உடைந்த குடமூக்கில் வைத்துப் பூஜித்து அதனுள் அந்தர்த்தானமாயினுர். குடத்தில் உதித்தமையால் **கும்பேசர் என்றும்**, அமுதத்தினுல் உண்டானமையால் அமுதேசனெனும் **அமுத லிங்கேசர் என்றும்** பெயர்கள் வழங்கலாயின.

இதற்குக் கீழ்பால் உறிவிழுந்த இடத்தில் முளைத்த லிங்கத்திற்கு **சிக்கேசர்** என்றும், இவ்விடத்திற்குக் கிழக்கே வில்வம் விழுந்து வில்வவனமாகி அங்குத் தோன்றிய லிங்கத்திற்குப் **பாதாளலிங்கம்**என்று பெயர் பெற்றன. தேங்காய் அக்னிமூலையாகச்சென்று பூமியில் புதைந்து செவ்விளநீர் மரமாகி அதனடியில் ஒரு லிங்கம்

காயின் குடுமியளவாகத்தோன்ற, அது நாரிகேளேசுவரர் என்றும், பூணூல் விழுந்த இடத்தில் தோன்றிய லிங்கத்திற்கு உபவீத லிங்கமென்றும், பரமசிவன் பாணம் விட்ட இடத்தில் தோன்றிய லிங்கத்திற்கு **பாணபுரீசுரர்** என்றும் பெயர்கள் போந்தன.

பார்வதி தேவியும் பரமசிவனை நெடும்போழ்து காணாது இத்தலமடைய, பரமசிவன் பார்வதியைநோக்கி "நீயும் இங்கு மங்களமாயிரு" என்று கூறலும், அவளும் இங்கு **மங்களநாயகி** என்று சிறப்புப் பெயர் பூண்டு அமர்ந்து அருளினாள்.

ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ ஆதிகும்பேசற்கு மக உற்சவம் செய்பவர் தீவினையாவும் நீங்கப்பெற்று, பேரருள் செல்வமெய்தி வாழ்வர். மகாமக விழா இயற்றும் திருவாளர் வேண்டும் போகங்கள் எல்லாம் துய்த்து, மேலுலகத்தை யாள்வர். விழாவில் வேதமோதுதல் செய்விக்கும் பெரியோர் சங்கர மயமாவர். உற்சவ காலங்களில் கூடவருபவர் கயிலைமேவி இன்புற்று அன்புற்றுச் சிறக்கவே வாழ்வர். திருவிழாத் தரிசித்தோர் அசுவமேத யாகம் செய்தவராவார். ஆலயத்தை வணங்கும் எண்ணம் பூண்டு அன்பால் வலம் செய்பவர் மேருமலையைச் சூழ்ந்தவராவார். முல்லை, மல்லிகை முதலிய மாலைகளைக் கட்டுவித்து வணங்குவோரும், பசுநெய்த் தீபமிடுவோரும் இந்திர பதம் சேர்வர். அறுசுவை அன்னம், பாயசம் முதலியன நிவேதிப்போரும், கவிகை முதலியவை நல்கிடுவோரும் வேந்தராவார்கள். மேள வாத்தியம், சங்கீதம் முதலியன முழங்கிடுமபடிச் செய்பவர் பல செல்வம் பெறுவர். வில்வார்ச்சனை செய்வோரும், பாலாபிஷேகம் செய்வோரும், நந்தவனம் வைத்துப் பன்மலர் பூசிப்போ

ரும், பொன் வெள்ளி பாத்திரங்கள் அளிப்போரும், சந்தனம், கற்பூரம் குங்குமம் நல்கிடுவோரும், வஸ்திரம் தந்திடுவோரும், பருவவிழாச் செய்வோரும், வாஹனம், ரதம் முதலியன செய்விப்போரும், கோவில் புதுக்குவோரும் சிவராத்திரி, பிரதோஷம், கார்த்திகை சோமவாரம் இவைகளில் அருச்சிப்போரும், கும்பேசர் மான்மியத்தை உண்மையென்று கருதுவோரும், கேட்போரும், சொல்லுவோரும் இந்திர, பிரம, விஷ்ணுவாதி வாழ்க்கையுற்று இறுயாந்து இனிது வாழ்வர்.

ஆவுடையார் சதுர வடிவமுள்ளது. பாணத்தின் உச்சியில் குடத்தின் மூக்குப்போல வாய் உள்ளது. பாணம் மென்மையானது. தீண்டின் உணரலாம். பாணத்திற்கு அபிஷேகம் இல்லை. புனுகு சாத்துப்படி. ஆவுடையாருக்கே அபிஷேகம். எதிர் மண்டபத்தில் நாலு கரங்களோடு மனோன்மணி விளங்குகிறாள். முருகனுக்கு ஆறுமுகங்கள். ஆறுமுகங்கள் கார்த்திகைக் கோலம். மங்களாம்பிகையின் திருவுருவம் உயரம் கடைக்கண் காட்சி. "நின்ற நிலைபோற்றி, நிலவு திருவடி போற்றி" என்று வணங்குகிறார்கள். அம்மை சந்நிதியின்மேல் பரமன் வேடவுருக்கொண்டு உடைத்ததும், லிங்கோற்பமானதும் சிற்பத்தில் காட்டப்பட்டிருக்கிறது. மங்கள கூப மேல்பால் ஒரு தூணில் நவநீத விநாயகர் சிற்பத்தில் விளங்குகிறார். தேரடி விநாயகரின் பெயர் ஈழங்கொண்ட விநாயகர் என்று அழைக்கப்படுகிறார். ஈழங்கொண்ட பராந்தகன் பெயர் ஞாபகத்திற்கு வருகிறது. கிராதவேடங்கொண்ட பரமன் வலக்கரங்கள் இரண்டில் பரசும், அம்பும், இடது இருகரங்களில் மானும், வில்லும் உள்ளன. மங்களாம்பிகை பீடம் அறுபத்து நான்கில் ஒன்று. கோவிந்த தீக்ஷதர் மனைவி, இருவரின் சிலா

ரூபங்கள் அம்மன் சந்நிதிக்கு எதிரிலுள்ளன. கும்பேசுரர் ஆலயத்தில் கற்பக்கிரஹத்தின் சுவரில் பரமசிவன் வேட உருவம் தாங்கிவந்த உருவம் விளங்குகிறது. கொடி மரத்துக்கு வடகிழக்கில் இலக்குமி நாராயணர் விளங்கு கிறார். மேலவீதியில் மோகனும்பாள் சந்நிதி இருக்கிறது.

---

9. மங்களநாயகிப் படலம்.

தானே தனக்குச் சரியாய தாயே வருக! உரைக்கவினை
தடிவாய் வருக! நினைக்கமுத்தி தருவாய் வருக! மலர்பொதிந்த
கானேபுரையும் கருங்கூந்தல் கவுரி வருக! மெஞ்ஞானக்
கரும்பே வருக! அருள்பழுத்தக் கனியே வருக! தெவிட்டாத
தேனே வருக! ஆனந்தத் திருவே வருக! பெருவேதச்
செல்வி வருக! எங்கள்குல தெய்வம் வருக! உருகுநருண்
மானே வருக! இமயவரை வனிதாய் வருக! வருகவே!
மறைவாழ்த்தொலிசால் திருக்குடந்தை மடந்தாய் வருக!
வருகவே!

— மங்களாம்பிகைப் பிள்ளைத்தமிழ்.

சிவபெருமான் கிராதவுருக்கொண்டு கயிலையினின்று நீங்கி, இந்நகரடைந்து, கும்பத்தில் திருவுருக்கரந்தருளின வரலாற்றைப் பிரமன் முதலிய தேவர்களும், ரிஷிகளும் பார்வதியிடம் கூறினார்கள். உடனே பார்வதி தேவியார் பல சேடிமார்களுடனும் பல விருதுகளுடனும், பொன் விமானத்தில் எழுந்தருளிக் கயிலையினின்றும் நீங்கிச் சோழநாடடைந்து, திருவிடைமருதூரைக் கடந்து ஐங் குரோச எல்லையிலுற்றுக் கும்பேசரைக் கண்டு வணங்கிப் போற்றி நின்றாள். பரமசிவன் பார்வதியை நோக்கி, "வந்தகாரியம் என்னென்று" வினவலும், "இன்று தங்களைத் தரிசிக்கவேண்டும்" என்று வந்தேன் என்றாள்.

பரமசிவன், நமக்கு வடபால் இடங்கொண்டு தொழு வார்க்கு அருள்புரிகவென்று கூறினர், அவளும் மந்திர பீடத்திற்கு மேற்பால் வாழ்த்தொலி முழங்க மேவினள். இந்தக்காரணத்தால் மங்களாம்பிகைக்கு மந்திரபீட நடந் தள் எனப்பெயர். நைமிசாரண்ணிய ரிஷிகள் நோய்கள் அகற்றும் காரணத்தாலே நலந்தருவள் என்றும் கூறு வார்கள். பரமசிவனையும் பார்வதியையும் காண, விநா யகக் கடவுள் எழுந்தருளினர். அவரும் ஆதி விநாயகர் என்று நாமம் பூண்டுள்ளார். சகல மங்களங்களும் ஒருங்கே அமையப்பெற்ற **மங்களநாயகியை** ஒருநாள் சேவிப்போர் அளவிலா இன்பத்துள் மூழ்குவர். மன்னர் செய் துன்பமானலும் சரி, கரும வசத்தால் வரும் பிணி களானலும் சரி, ஸ்ரீ மங்களநாயகி தரிசனத்தாலே அவ் வினைகள் எல்லாமகன்று பலவளமெய்தி இன்பமடை வார்கள். பைசாச பூத வேதாளமாகிய பலவும் அஞ்சி யோடும். மாமக வருடத்தில் சுக்கிரவாரந்தோறும் நூற் றெட்டு செவ்வரத்தம்பூவால் மாலைகட்டிச் சாத்திடுவோர் சற்புத்திரனைப்பெற்று இனிது வாழ்வர். ஆவணி மாதத் தில் செவ்வரத்தம்பூக்கொண்டு அருச்சிப்போர் நெடு மாலைப்போல் ஒரு புத்திரனைப் பெற்று இனிது வாழ்வர். சுக்கிரவாரந்தோறும் கொண்டை மாலைகட்டிச் சாத்து வோர் எவ்வினைகளும் நீங்கிக் குபேரனைப்போல் வாழ்வர். குங்குமத்தால் சகஸ்ரநாம அர்ச்சனை செய்வோர் அள விலா இன்பமுற்று வாழ்ந்து இறுதியில் சிவகதியும் சேர் வர். மஞ்சள்கொண்டு அருச்சிப்போர் பிதிர்களையெல் லாம் நற்கதிபெறச் செய்வார். மலர்கொண்டருச்சிப்போர் சுவாசகாசம் நீங்கி இனபுற்று வாழ்வர். வில்வமாலை பண் புற இடுவோர் நல்லநிதி அரசராவார். சந்தனத்தில் பன் னீர்விட்டு பச்சைக் கற்பூரம், கஸ்தூரி குங்குமப்பூச் சேர்த்

துச் சாத்துவோர் அளவிலாச் செல்வமுற்று கயிலைமேவி இன்புறுவர். வெட்டிவேரால் தேக முழுவதும் அலங்கரிப்போரும், கோமேதகம், நீலம், பவழம், புஷ்பராகம் மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் முதலிய நன்மணிகளைச் செம்பொன்னில் பதித்து ஆபரணங்களாகச்செய்து அலங்கரிப்போரும் உலகங்களுக்கெலலாம் அரசராவார். நூற்றெட்டு ருத்திராக்க மணியால் பக்தியோடு அருச்சிப்போர் இம்மை, மறுமைப் பயனை அடைவர். நெய்விளக்கிடுவோர் மனிதர்களில் சிறப்புற்றோங்கித் தேவர்களும் வியக்க வாழ்வர். சுக்கிரவாரந்தோறும் தீர்த்தமாடி மாவிளக்கிடுவோர் சற்புத்திரனைப் பெறுவர். அறுசுவையன்னம், பாயசம் முதலியவைகளை நைவேத்திப்போர் தேவலோகத்தை யாள்வர். பால், தயிர், தைலம், சந்தனம், குங்குமம், கங்கை முதலியவற்றால் விருப்போடு அபிஷேகம்செய்வோர் நோய் முதலான யாவும் நீங்கி பூமிமுழுதுமாண்டு சிவலோகம் சேர்வர். கோவில் புதுக்குவோரும் விழாச் செய்வோரும் அடையும் பலன்கள் அனந்தம். ஆகையால் ஸ்ரீ மங்களநாயகியை மனத்திலிருத்தி அன்போடு வணங்குவோமாக!

10. நகர்காண் படலம்.

நான்முகன் சிவபெருமான் கொடுத்தருளிய பீஜம் கைக்கொண்டு ஆலயங்கள் அமைக்கவும், வீதிகள், மாட மாளிகை கூடகோபுரங்கள் இயற்றவும் எண்ணி, விசுவகன்மனை நினைத்தான். உடனே மயன் அங்குத்தோன்றிப் பிரமனை வினவலும், அவன் தேவலோகமும் தாழும்படி

யாகவும், பார்ப்பவர் கண்ணைக் கவரும்படியாகவும், ஐங்குரோச எல்லையளவில் நகரமைத்து மலைபோன்ற மதில்களையும், அகழ்களையும் உண்டுபண்ணுக என்று கட்டளையிட்டுத் தான் அமுதவாவியிலும், கன்னி தீர்த்தத்திலும் படிந்து ஸ்ரீ ஆதி கும்பேசர் பதம் போற்றித் தன் தொழிலை ஆரம்பித்தான். மதில்கள் மலைகள்போல் உயர்ந்தன. ஆகாயத்தை யளாவும்படி கோபுரங்கள், விமான மண்டபம். ஆயிரக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம் முதலிய பல மண்டபங்கள், விநாயக முருகவேள் ஆலயங்கள், அப்பர். சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர் கோவில்கள், சந்திரசேகரன் விரும்பும் நிகேதனம், சோமாஸ்கந்தர் மந்திரம், நடராஜப்பெருமான் நடிக்கும் அம்பலம், மற்ற தேவர்களிருப்பிடம், கும்பேச மங்களநாயகி கர்ப்பக்கிரகம், யாகசாலை, மடப்பள்ளி, வாகனம் வைக்கும் இடம், நந்தி வீற்றிருக்கும் இடம், பலிபீடம், பொருள் சேகரித்து வைக்கும் அறை, இரண்டு பக்கங்களிலும் சோபானம், கருவூலம், கூபம் முதலிய யாவும் அமைத்தனன். இவ்வாறே நாகேசர் பலருக்கும் ஆலயங்கள் இயற்றினர். பல ஆலயங்களுக்கும் கும்பாபிஷேகம் சிறக்கச்செய்துப் போற்றி இனிது வாழ்ந்திருந்தான்.

11. பிரமன்பூசைப்படலம்.

நான்முகன் கும்பேசற்கு பூசைசெய்வான்கருதி, மாசி மாதம், பூர்வபக்ஷம், அசுவதி நட்சத்ரம்கூடிய சுபதினமே உரித்ததென சோதிட நூல் வல்லவர் கூற, அந்நாளுங் குறித்து, வேண்டிய திரவியங்களை ஒரு சிறிதும் குன

விலாது சேகரிக்க, ஏவலாளர்க்கு வேறு வேறு பணிகளை இட்டனன். சிலர் தேவலோகஞ்சென்று கற்பக முதலிய மலர் மாலைகளையும், சிலர் தீவாந்திரங்களில்சென்று பல அற்புத பொருள்களையும், சிலர் பூவுலகு சென்று பல புது வஸ்திரங்களையும், சிலர் பாதாளம் சென்று மாணிக்கம் முதலிய நவரத்தினங்களையும், சிலர் உவர்க்கடல் நீர் நீங்கலாக மற்ற எல்லாக் கடல் நீரையும், சிலர் கங்கைக் காவிரி முதலிய தீர்த்தங்களையும், சிலர் நறுமணங்கமழும் மலர், இளந்தளிர், வில்வம் முதலியவற்றையும், சிலர் நாலுவித மாலைகளையும் சேகரித்து வந்தனர். மண்டபங்கள், நவரத்தினங்கள் இழைத்த பற்பல மணி மாலைகளாலும், பூமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டன. தூண்கள்தோறும் வாழை, கமுகு முதலிய பழக்குலைகளைச் சிறக்கக் கட்டினர். சித்திரங்கள் எழுதினார்கள். முத்து பொன், பவளம், நீலம் முதலியவைகளைப் பொடிசெய்து கோலம் போட்டார்கள். பொற் பாத்திரங்கள் இடங்கள் தோறும் இட்டனர். பிரமன் பொற்றாமரை மகாமக தீர்த்தங்களில் விதிப்படி ஆடி, திரிபுண்டரம் தரித்து, ருத்திராக்கம்பூண்டு ஐந்தெழுத்து ஓதி, கைகளைச் சிரமேல் குவித்து வாத்தியங்களின் கோஷத்துடன் முனிவர்கள் சூழக் கோபுரத்தை வணங்கி, ஆலயத்துள் புக்கு வலம் வந்து ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ ஆதிகும்பேசற்கு விதிப்படித் திருமஞ்சன மாட்டிப் பற்பல ஆபரணங்களாலும் பூமாலைகளாலும் அலங்கரித்துப் பலவகைச் சித்ரான்னங்கள், நீர் அமுதங்கள் முதலிய யாவற்றையும் ஒரு சிறிதும் குறைவின்றி மந்திரபூர்வமாக நைவேத்தியஞ் செய்து, சோடசோபசாரம் காட்டி, வலம்வந்து, அட்டாங்கமாக நமஸ்கரித்து, துதித்து, மனம் அனலில்பட்ட மெழுகுபோல் உருகக் கண்களிரண்டும் ஆனந்தபாஷ்பம் ஆறாகப்பெருக, அன்புருவாய் நின்றனன்.

உடனே ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ ஆதிகும்பேசர் விருஷப வாகனத்தில் காட்சியளித்து, "உன் தவத்திற்கு மெச்சினேம், வேண்டும் வரம்கேள்" என்று கூறலும், பிரமன் நின் தரிசனம் செய்வோர் நினைத்ததைப் பெறல் வேண்டும். பிரதோஷம், மற்ற புண்ணியகாலங்களில் நினை அன்போடு மனத்திருத்தி போற்றுகிறவர்களுக்கு புத்தி முத்திக் கொடுத்தல் வேண்டும். மகாமக வருடத்தில் தீர்த்தங்களெல்லாம் இங்கு அடைதல் வேண்டும். நெடுந் தூரத்திலுள்ளவர்கள் தீர்த்தமாட நினைத்து ஓரடி எடுத்துவைத்தாலும் எண்ணியவாறு பலனடைதல் வேண்டும், இன்னும் பல வரங்களைக் கேட்க, கேட்ட படி அருளிச்செய்து, திருவுருக்கரந்தருளினர். விநாயகர் சுப்பிரமணியர் முன்போக, சண்டேசுவரர் பின்னே வர, ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ ஆதிகும்பேசர் திருவீதியிலே எழுந்தருளிய காட்சியே காட்சி! இவ்வாறு ஏழுநாளும் காலை மாலை சிறக்கவே காட்சியளித்தனர். இரதோற்சவமும் சிறப்பாக நடந்தேறியது.

---

12. விசுவநாதர் வரவுப் படலம்.

கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, சிந்து, கோதாவரி, சரயு, தாமரைபரணி என்னும் ஒன்பது நதிகளும், கன்னிகை உருக்கொண்டு வெள்ளியங்கிரிக்குச் சென்று ஸ்ரீ பார்வதி சமேத ஸ்ரீ பரமேசுரனைப் போற்றி, "எல்லோரும் எங்களிடம் மூழ்கி, பாவங்களைப் போக்கிக் கொள்கிறார்கள். அப்பாவம் யாவும் எங்களைவிட்டகலு மாறு அருளல் வேண்டும்" என்று கூறலும், அதற்குப் பரமசிவன், "கும்பகோணத்திலுள்ள மகாமக தீர்த்த

மாடின் நீங்கும்" என்றருளினர். கன்னிகைகள் அது எங்களுக்குத் தெரியாதென்றனர். அவர் நீங்கள் காசி சென்று தங்கி இருங்கள், அங்கு நான்வந்து அழைத்துச் செல்லுகிறேன் என்று கூறினர். அவ்வாறே பரமசிவன் காசிசென்றுஅவர்களை அழைத்துவந்து கும்பேசர் முதலிய யாவரையும் தரிசித்து, தீர்த்தக்குளக்கரைக்குக் கீழ்பால் வர, நாரிகேளேசுரர் கிழக்கினின்று மேற்கு முகமாகத் திரும்பினர். கன்னிகைகள் ஆச்சரியமுற்று, பரமசிவனை "சிவலிங்கம் இவ்வாறே இருக்க அருள்புரியவேண்டும்" என்றனர். அவ்வாறே "ஆகுக" என்று கூறி, வடகரை யடைந்து விசுவநாதர் எனும் பெயர்பூண்டு, மேற்குநோக்கியும்: ஒன்பது கன்னிகைகளும் தெற்கு நோக்கியும், மேற்கே கங்கையும், கிழக்கே தாமிரபரணி இறுதியாக கோவில்கொண்டெழுந்தருளினர்கள்,

---

13. மகாமக தீர்த்தப் படலம்.

பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை கும்பகோண மகா க்ஷேத்திரத்திலே மாசி மாதத்தில் நடக்கும் திருவிழாவின் கடைசிநாளில் தீர்த்தமாடும் தினம் மாமகம் எனப்படும். அத்தினத்தில் இமயமுதல் சேதுவரையிலுள்ளாரில் அநேகர் இக்குடமூக்குற்று இத்தலத்தில் தென் கிழக்கில் உள்ள அமுத வாவியில் ஸ்நானம் செய்வர். அமுதம் தங்கிய காரணத்தால் அமுததீர்த்தமென்றும், இதில் ஒரு வருடத்திற்கு முன்னரே சகல தீர்த்தங்களும் ஒருங்கே வந்து சேர்ந்த காரணத்தாலே பகு தீர்த்தம் என்னும், நவகன்னியர்கள் ஸ்நானம் செய்தமையினலே கன்னீ

மகாமக

தீர்த்தக்குளம்.



ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக் குறியில்அறு குணத்தாண்டு கொண்டார் போலுந்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

மகாமக

தீர்த்தம்.		பலன்.
1. 66-கோடி	...	துன்பம்நீக்கி இன்பம் கைகூடும்
2. கங்கை	...	கயிலை பதவி அளிக்கும்
3. பிர்மன்	...	பிதுர்க்களைக் கரையேற்றும்
4. யமுனை	...	பொன் விருத்தியுண்டாகும்
5. சிந்து	...	கல்வியை அளிக்கும்
6. குபேரன்	...	சகல செல்வங்கள் உண்டாகும்
7. நர்மதை	...	திடகாத்திரம் உண்டாகும்
8. ஈசான்யன்	...	சிவன அடி சேர்க்கும்
9. சரஸ்வதி	...	ஞானம் உண்டாகும்
10. இந்திரன்	...	வானுலக வாழ்வு அளிக்கும்
11. கோதாவரி	...	இஷ்டசித்தி உண்டாகும்
12. அக்கினி	...	பிரஹமத்தி நீங்கும்
13. காவிரி	...	புருஷார்த்தங்களை நல்கும்
14. யமன்	...	யம பயமில்லை
15. கன்னியாகுமரி	...	அஸ்வமேத பலனை கொடுக்கும்
16. நிருதி	...	பூதப்பிரேதபைசாச குற்றம்நீங்கும்
17. தாமிரபரணி	...	கோலோகம் அளிக்கும்
18. வருணன்	...	ஆயுள் விருத்தி உண்டாகும்
19. சரயு	...	மனக்கவலை தீரும்
20. வாயு	...	பிணிகள் அகலும்

குறிப்பு:- வடக்கில் நவகன்னியர்கள் தீர்த்தமண்டபம் புதிதாக கட்டப்பட்டிருக்கிறது.

தீர்த்தமென்றும், பிரகஸ்பதி சிம்ம ராசியில்கூடி, அச்சிம்ம ஸ்தானாதிபதியாகிய சூரியன் தன் மகன் சனி வீட்டுக்குள் ஏழாமிடமாகிய கும்ப ராசியில் நின்று பௌர்ணமி கூடிய மக நக்ஷத்திரத்தில் சந்திரன் குருவுடன் சேர, குருவும் சந்திரனும் சூரியனையும், சூரியன், குரு சந்திரன் இவ்விருவரையும் முழுப் பார்வையாகப் பார்க்கும் நாளிலே நீராடுகின்ற காரணத்தினாலும், பல புராணங்களில் கொண்டாடப்படுவதினாலும், மகாமக தீர்த்தமென்றும் பெயர் பெற்றது. இது மகாமகக்குளமென்றும் வழங்குகிறது. பிரபவமுதல் அக்ஷய இறுதியாக உடைய வருடங்கள் அறுபதில் மகாமகம் ஆங்கீரஸ வருடத்தில், இனி தாரண, துன்முகி, கீலக, ரௌத்திரி வருடங்களில் வர வேண்டுமென்றும், குருவின் அதிசாரத்தினாலும், வக்கிரத்தினாலும், ஒரு வருடம் முன் பின்னாகவாவது ஏகதேசம் வருவதுண்டு. இவ்வருஷம் முறைதவறி வருகிறது.

இம்மகாமக தீர்த்தத்தின் மத்தியில் 1. அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள், 2. இதற்கு நேர் கிழக்கே இந்திர தீர்த்தம். 3. தென்கிழக்கே அக்கினி தீர்த்தம். 4. தெற்கே யமதீர்த்தம். 5. தென்மேற்கே நிருதிதீர்த்தம். 6. மேற்கே வருணதீர்த்தம். 7. வடமேற்கேவாயுதீர்த்தம். 8. வடக்கே குபேர தீர்த்தம். 9. வடகிழக்கே ஈசான்ய தீர்த்தம். 10. இந்திர அக்கினி தீர்த்தங்களுக்கு நடுவில் கோதாவரி. 11. அக்னி, யமதீர்த்தங்களுக்கு நடுவில் காவிரி. 13. நிருதி தீர்த்தங்களுக்கு நடுவில் தாம்பிரபரணி. 14. வருண வாயு தீர்த்தங்களுக்கு நடுவில் சரயு. 15. வாயு குபேர தீர்த்தங்களுக்கு நடுவில் கங்கை. 16. பிரமதீர்த்தம். 17. யமுனை 18. சிந்து. 19. குபேர ஈசான்ய தீர்த்தங்களுக்கு நடுவில் நர்மதை. 20. ஈசான்ய இந்திர தீர்த்தங்களுக்கு நடுவில் சரஸ்வதி முதலிய தீர்த்தங்களிருக்கின்றன.

உ

கும்பகோணம் மகாமக தீர்த்தப் படம்.



பிரமன் கும்பேசற்குப் பன்னிரண்டு வருடம் உற்சவம் நடத்தி, தீர்த்தவிழாவும் சிறப்புற இயற்றிய காரணத்தால் பரமன் அகமகிழ்ந்து, பிரம தீர்த்தத்தை இவ்வாவி முழுவதும் பரவச்செய்தார். இத்தீர்த்தத்தை ஒரு தரம் வலம்செய்வோர் பூமியை நூறுதரம் வலம்செய்த பேறடைவர். இதை ஒருக்கால் மனமாரக் கைக்கூப்பி வணங்கினவர் தேவரை என்றும் வணங்கின பலனை அடைவர். இதில் யாதொரு காரணமுமின்றி ஒருதரம் முழுகினவர் உண்மையில் சிவனேயாவர். ஒரு தடவை ஆசமனம் செய்வோர் பாவங்களெல்லாம் ஒருங்கே மாயும். கோடி ஜன்மம்வரை தன் குலத்திலுள்ளாரை ஈடேற்றி வைச்

கும். வேதம் ஓதுதல், யாகஞ்செய்தல் முதலியவைகளை நீக்கிய பாவியரே யானாலும், இத்தீர்த்தமாடில், குபேரனைப்போல சிறப்புறுவர். மகாமக நாளன்று ஒருதரம் மூழ்கினவர், பௌண்டரீகம், அசுவமேதம் முதலிய யாகங்களைச்செய்த பலனை அடைவர். வழிச்செல்வோர் ஒருதரம் மூழ்கினால், புவிக்கரசராவர். மான்மியமறிந்து விதிப்படி ஸ்நானம் செய்வோர் நூறு வருடகாலம் கங்கையில் மூழ்கின பலனை அடைவர். புத்திரசந்தானம் விரும்பியவர் மகநாளில் ஐந்துதரம் மூழ்கினால் சற்புத்திரனைப் பெறுவர். மகதீர்த்தமாடி, கோதானம், பூதானம் வஸ்திரதானம் செய்வோர் இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கே அடைவர். தன்குலம் தன் மருமகன் குலம், சிற்றப்பன் குலம், பெரியப்பன், உடன்பிறந்தான் குலம், சிற்றன்னைக்குலம், மாமன்குலம் முதலிய ஏழு குலமும் இதர ஏழு குலத்துள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பதினன்காகத் தொண்ணூற்றெட்டு சிநேகிதன், சுவாமி, ஆசான் இம்மூவரையும் உள்பட நூற்றொரு குலமும் இத்தீர்த்த ஸ்நானத்தால் முத்தியடையும்.

காசி முதலிய சகல க்ஷேத்திரங்களிலும் உள்ள தீர்த்தங்களெல்லாம் மகாமக நீராடும்பொருட்டு, மகாமக வருடத்தில் குடந்தை அடைகிறபடியால் இந்தத் தீர்த்தங்களில் இவ்வருடத்தில் சென்று மூழ்கினால் பயன் யாதுமில்லை, மகாமக வருடத்தில் மகாமக தீர்த்தமே ஆடல் வேண்டும். கோடி புண்ணியங்களைச் சேகரித்து பெருமையுற்றவர்களாக இருந்தாலும் இம்மகாமக தீர்த்தம் ஆடாவிடில் அவை யாவும் ஒருங்கே மாயும். இந்திரன் முனிவர்கள் எல்லாம் இம்மாமக தீர்த்தமாடுகிறார்கள் என்றால் இதன் பெருமையை உரைக்கவல்லார் யார்? இவ்வருடங்

களில் நற்காரியங்கள் செய்யின் அவைப் பயன்படா. கல்யாணம், உபநயனம் முதலியனவும் செய்தலும், கூபம் வாவி முதலியவைகளைப் பதிட்டை. செய்தலுங்கூடாது. மறையவர், ஆசான், தந்தை முதலியவர் நிந்தை, தீயோரிடம் பொருள்கொள்ளல், சிவ திரவியங்களைக் கொள்ளுதல், சிவதருமத்தை யழித்தல், சிவ ஆராதனைக்காக வைத்த பொருளைக் கவர்தல். சிவனை வழிபடுவோரை நிந்தித்தல், விபூதி, ருத்திராக்கம், சிவலிங்கம், ஞான நூல் இவைகளைக் கவர்தல், தந்தை செய்த தருமத்தை விற்றல், அரசு, வில்வம் முதலிய மரங்களைக் கெடுத்தல், கொடுப்பேன் என்று கூறிக்கொடாது இருத்தல், குளம் தூர்த்தல், நந்தவனம், வில்வம், கன்னி இவற்றை விற்றல், பசுவை வருத்துதல், நட்பினரைப் பகைவராக்குதல் கருச் சிதைத்தல், கன்னியைத் திருடல், விக்கிரகங்களை அழித்தல், கூலிவேலை செய்துண்பாரைக் கெடுத்தல், பயன்தரும் மரம்வெட்டல், சர்ப்பத்தைக் கொல்லல், கொலை செய்தல், நட்பினர் சொன்ன யாவையும் விரோதமுறின் பிறர்பால் கூறல், மூர்க்கர்க்குப் பணிசெய்தல், சிவனடியார் நிந்தை, பிறர் பசித்திருக்கத் தானுண்டல், பிறன்மனை நயத்தல், பரத்தையர் விரும்பல், கன்றுவருந்த பசுவின் பாலைக்கொள்ளல், தந்தை சிரார்த்தம் செய்யாதிருத்தல், தந்தை தளர்வுற்று இருப்ப இழித்துக் கூறுதல், விபூதியை ஒருகைநீட்டி வாங்கல், கற்புடைய மாதர்க்கு தோடங்கூறல் முதலிய பாவங்களெல்லாம் விதிப்படி மகாமக நீராடில் பஞ்சாய்ப் பறக்கும். ஒருதரம் மூழ்கினுல் ஞானமுண்டாகி முத்தியின்பம் கைகூடும். மகாமக வருடத்தில் தினந்தோறும் மூழ்கில் உத்தமம். இல்லாவிடில், மாசி, சித்திரை, கார்த்திகை மாதங்களிலும், இதுவுமியலாவிடில் மாசி மாதத்திலுங்

இதுவுமியலாவிடில், மகநாளிலும் மூழ்கல் வேண்டும். வியாதியினாலும், தரித்திரத்தினாலும் இயலாதவர்கள் மகாமக தீர்த்தமாடினவர்களைக்கண்டு தரிசித்திடல்வேண்டும். இதுவும் இயலாதவர்கள் குடமூக்குப்பக்கம் நோக்கி மலர் தூவி அன்புடன் போற்றல் வேண்டும். இதற்கு மேல் மாற்றமில்லை. அமாவாசை, மாதப்பிறப்பு, உத்தராயணம், தக்ஷிணாயனம், கிரகணம், விதிபாதம், சிவராத்திரி முதலிய புண்ணிய நாட்களில் செய்யின் மிகப் பலனுண்டாம். சகல துர்க்குணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற சண்டி என்பாள் மகாமக தீர்த்தமாடி நலமுற்று முத்தி அடைந்தாள். வேதாளம் பிடிக்கப்பெற்ற ஏமவாகு மனைவி மகாமக தீர்த்தம் தோய்ந்து வேதாளம் நீங்கப்பெற்று சுகமுடன் வாழ்ந்தாள். ஸ்ரீராமர் மாமகத் தீர்த்தமாடிச் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்து ருத்திரக்கூறு பெற்று இராவணனைக்கொன்று மகுடஞ் சூடிச் சிறக்கவே வாழ்ந்தார்.

மகாமகத் தீர்த்தக்கரையில் சுற்றிலும் பிரமதீர்த்தேசம் முகுந்தேசம், தனேசம். விருஷபேசம், பாணேசம், கோணேசம், பக்தேசம், பயிரவேசம். அகஸ்தீசம், வியாகேசம், உமையபாகேசம், நைருதீசம், பிரமேசம், கங்காதரேசம், முக்த தீர்த்தேசம், க்ஷேத்திரபாலேசம் முதலிய ஆலயங்களுண்டு. இந்தத் தீர்த்தம் கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் புதுப்பிக்கப்பட்டு 16-மண்டபங்களும் கட்டினார். இவர் அச்சுதப்ப நாயகர் என்னும் அரசனுக்கு மந்திரியாவார். இராமசாமிகோவில் கட்டக் கொடுத்தப் பணத்தைக்கொண்டு புதுக்கினார். அரசன் கோபிக்க, துலாபாரம் செய்யச்சொல்லி, அந்த பொன்னைக் கொண்டு இராமசாமிக்கோயிலைக் கட்டினார்.

திருவிழா முடிவில் கும்பேசுரர் முதலிய பலரும் வாகனங்களில் சிறப்பாக வந்து தீர்த்தங்கொடுத்தருள, பிரமன், நவகன்னியர்கள், விண்-மண்ணுலகத்தார் யாவரும் விதிப்படித் தீர்த்தமாடி அவரவர்கள் குறைநீங்கி விளங்கினார்கள்.

14. நவகன்னியர் அருச்சனைப் படலம்

கங்கை:- திரிபதகை, தேவி, சிமதி, சானவி, வீட்டுமமாதா, உலோகமாதா, சுவர்த்துனி, மேருசம்பவை, திரிலோசன சடோற்பூதை, சத்ததாரா, சுபாவகை. 11.

யமுனை:- சூரியசம்பூதை, காளிந்தி, யமசுவசா, சுத்தை, காமதை, சாந்தை, அனந்தை, சுபாங்கினி, வசுப்பிரதை, வசுமதி, வசுப்பிரீதை 11.

சரசுவதி:-சாந்தபவை, சமருபி, சமப்பிரதை, ஞானவயிராக்கியதை, ஞானரூபி, அஞ்ஞானவிபேதினி, மேருகோடரசம்பூதை, மேகநாதானுவர்த்தனி, பிரதீசி, சண்டவேகாட்டியை, மாயாவிச்சேதகாரிணி 11.

நர்மதை:- சோமோற்பவை. சோமமுகி, சோமசேகரப்பிரியை, மருமரூபி, சுமர்மார்த்தனி, தரிசனி, சுப்பிரபை, சுலபை, புண்ணியை, இரேவைமேகல கன்னிகை, சருவக்கியை 11.

காவேரி:- விதிசம்பூதை, கலியாணி, காமதாயினி கலியாணதீர்த்தரூபி, சையாசவ உற்பவை, உலோபாமுத்திரா, சுவசாஸ்யாமா, குப்பசம்பவ வல்லபை, விண்டுமாயை, சோளமாதா, தக்கனுபைதசானவி 11.

சிந்து:- கன்னியாநதி, தேவி, கனகாயை, கருச்சை, கலாவதி, காமதை, காமப்பிரியவரப்பிரதை, காளீ, காமப்பிரதை, காலதாயினீ, கமடாகலே 11

கோதாவரி:- கோதை, கவுதமவநாசினி, சத்தஸ்ரோதை, சத்தியவதி, சத்தியரூபி, சுவாசினி, சுலபை,

சூக்ஷமரேகாட்டியை, வேகாவர்த்தை, மலாபகை, பத்த விட்டதை 11.

சரயு:- சண்டவேகாட்டியை, இட்சுவாகுகுல வல்லபை, ராமப்பிரியை, சுபாராம தடத்துவயவிராசிதை, சரப்பிரவிருத்தை, எக்யாங்கை, எக்கியபலதாயினி, சீரங்க வல்லபை, மோகதாயினி, பூரணகாமதை, பத்தவிட்டதான சவுண்டரை 11.

தாமிரபரணி:- பாபகாரிணி, பாலகை, பரிமோதினி, பூரணை, பூர்ணவதி, மோகை, மோகாவதி, சுபை, அந்தர்வேகவதி, வேகை, சர்வேச்சிதபலப்பிரதை 11.

ஒவ்வொருவருக்கும் உள்ள பதினொரு பெயர்களோடு இயற்பெயரைச்சேர்க்க பன்னிரெண்டாகும். பன்னிரெண்டையும் ஒன்பதோடு பெருக்க நூற்றெட்டாகும். இவை மந்திரங்களே. இவற்றைப் படிப்போரும், கேட்கிறவர்களும் மிக்க கருணையைப் பெற்றவராவர். இந்த மந்திரங்களைக்கூறி அருச்சித்து வணங்கி பாவங்களையெல்லாம் போக்கிக்கொள்ள இன்று தீர்த்தமாடுவேன் என்று பிரார்த்தித்து அபிமுகேசர் ஆலயம்சென்று வணங்கி அனுக்ஞைபெற்றுத் தீர்த்தத்தை வலம்செய்து பிரம்ம தீர்த்தத்தை அணுகி, ஸ்ரீ கும்பேசரைத் துதித்து, அனுக்ஞைப் பெற்று சங்கற்பம்செய்து பவித்திரத்தைக் கையிற் பூண்டு, கனி வர்க்கங்களைக் கையிலேந்தி வருணனை வாழ்த்தி இப்பிறவி முற்பிறவியில் செய்த பாவங்களை போக்கக்கருதி வந்தேன் என்று நினைத்து அருள்புரிவீராக என்று கூறிக் கனிகளை ஜலத்திலிட்டு விதிப்படி மூழ்கி, தர்ப்பணம்செய்து மற்றவர்களையும் வணங்கி ஸ்ரீ கும்பேசுரரை மனதிலிருத்தி அரசுவிருக்ஷத்தை வலம்

வந்து அம்மரத்தடியிலிருந்து இயன்ற தான வகைகளைச் செய்து சோமேசுரர்முதலிய பலரையும்போற்றிவணங்கல் வேண்டும். ஸ்ரீ கும்பேசுரரை மனத்திலிருத்தி விதிப்படி தீர்த்தமாடுவோர் இருவினையொப்பு மலபரிபாகம் சத்தி பாதமுற்று முத்தியடைதல் திண்ணம்.

15. வீரவன்மன் புத்திரனைப்பெற்று முக்தியடைந்த படலம்.

கலிங்கநாட்டரசன் வீரவன்மன், மனைவி சுமதி இவர்களுக்கு அங்கஹீனமுள்ள ஒரு புத்திரன் பிறந்தான். இருவரும் இக்குழந்தையைப் பார்த்து வருத்தமுற்றார்கள். இந்த சமயத்தில் சாண்டிலிய முனிவர் அங்குத் தோன்றினன். அரசன் நல் ஆசனத்திருத்தி, அருக்கியம் கொடுத்தும், பூசையாற்றித் தன் குறை இரந்தும் நின்றான். அதற்கு அவர் நீ கட்டிய உப்பரிக்கைக்குப் படியாக நாகச்சிலைகளையெல்லாம் பிளக்கச்செய்தாய் அதனல் அங்கவீனமுற்ற மகவைபெற்றாய். "நீ மனைவியோடு மகாக்ஷேத்திரமாகிய கும்பகோணம்சென்று நவநீதத்தால் ஒரு லிங்கம்செய்து பூசித்து, இரத்தினம், பொன் முதலியவற்றோடு வேதம் ஓதிய மறையோருக்கு ஈந்தால், நன்மகவுண்டாகும், முத்தியும் பெறுவாய்" என்று கூறினர் முனிவர். அரசன் மனைவி, சேனை முதலிய பரிவாரங்களோடுப் புறப்பட்டு கும்பகோணம் சேர்ந்தான். மகாமக நாளும் வந்துற்றது. விதிப்படி தீர்த்தமாடிக் கும்பேசர் ஆலயஞ்சென்று வலம் வந்து போற்றியும், திருப்பணிப் பல நடாத்தியும், திருவிழா சிறப்புறச்செய்தும், துதித்தும் நின்றான் நாளும். நவநீதலிங்கமாதிகளும், மற்ற

நல்ல தான தருமங்களுஞ் சிறப்புறச் செய்துவாழும் நாளில் மனைவி கர்ப்பமுற்று முருகனைப்போல் சற்புத்திரனைப் பெற்றாள்.

பின்னர் தன் தேயஞ்சென்று சின்னாள் அரசுபுரிந்து வயதுவந்ததும் மைந்தனுக்கு மகுடஞ்சூட்டி அரசு நீத்துப் பின்னும் கும்பகோணம் நண்ணி, மகாமக தீர்த்தமாடியும், கும்பேசுரர் முதலிய பலரையும் போற்றிப் பஞ்சக்குரோச யாத்திரையும் செய்து முத்தி பெற்றான்.

---

16. சோமேசப் படலம்.

பொற்றாமரைத் தீர்த்தத்தின் கீழ்பாலுள்ள சிக்கேசுரர் எனும் லிங்கம், கும்பத்திலினின்றும் விழுந்த உறித் தங்கிய இடத்தில் முளைத்தது. சோமன் இருபத்தேழு மாதர்களை மணந்துவாழும் நாளில், ஆசான் மனைவியைக் கண்ணுற்று, அவள் அழகைக்கண்டு மோகித்து, நேசங் கொண்டான். இதை யறிந்த ஆசான் இவனுக்குக் காய நோய் அடையுமாறு சபித்தான். இவன் மிக வருந்தி ஆசானையே மன்னிக்கும்படி வேண்ட, ஆசான் "கும்பகோணம்சென்று, பொற்றாமரைத் தீர்த்தமாடிச் சிக்கநாதரைப் போற்றுவாயாகில், நீ உய்வாய்" என்றான். உடனே குடந்தையுற்று தீர்த்தமாடித் துதிசெய்ய விடைமேல் பார்வதி சமேதராகப் பரமன் காட்சியளித்தார். அவரைப் போற்றி நமஸ்கரிக்க, அவர் "வேண்டும் வரம் என்ன" என்றார். அதற்குச் சோமன், "தேவரீரும் உமையும் என்பெயர்கொண்டு விளங்கவும், யான் உண்டாக்கிய தீர்த்தம் என் பெயர்பெற்று விளங்கவும் வேண்

டும்" என, சிவபெருமானும் அவ்வாறே அருளித் திரு வுருக்கரந்தார். இச்சோம தீர்த்தம் இப்போது தூர்க்கப் பட்டுள்ளது.

நவகன்னிகைகள் மகாமக தீர்த்தமாடவருங்கால், அவண் எழுந்த ஆரவாரத்தால் பார்வதி அஞ்சிப் பரமனுரை அணைத் துக்கொண்டாள். அம்மையாரின் காயத்தை ஆரோகணித்துக் கொண்டமையால், காயாரோகணம் என்றுயிற்று. "தேனுர் மொழியுடன்வாழ் தென்குடந்தைக் காரோண, ஞானேதயச் சோமநாதனே" என்று உமாபதிசிவம் கூறியுள்ளார். நாகே சரை வணங்கிய சம்பந்தர், அண்மையிலுள்ள சோமேசத் தைத் தரிசிக்கக்கூடாதா ? அக்காலத்தில் வழியும் பலவாறு அமைந்திருக்கும். காசி விசுவேசத்தில் நவ கன்னியர்கள் மிகச் சிறப்புடையவர்கள். சம்பந்தர் தேவாரத்தில் நவகன்னி யர்களின் குறிப்பில்லை. புகலூரில் முருகநாயனுரையும், செங் காட்டாங்குடியில் சிறுத்தொண்டரையும் பதிகத்தில் குறிக்கவில் லையா? ஆதலால் காரோணப் பதிகம் சோமேசருக்குரித்தது என்று பலர் துணிபு.

இதன்றியும், இவ்வாலயத்தின் மேற்குக் கோபுர வாயிலின் உட்பக்கம் தென்புறத்தில், ஒரு மாடத்தில் ஓர் கற்சிலைக் கர்ப்பக் கிரகத்தை நோக்கி கும்பிட்டவண்ணம், இரண்டு கைகளில் தாளங்கள் உள்ளனவாக விளங்குகின்றது. தாளத்தை நோக்க சம்பந்தர் ஞாபகம் வருகிறது சம்பந்தர் கோயிலை வலம் வந்து வணங்கிப் பதிகம் பாடுகிறதென்பது புராணங்களில் பேசப்படுகிறது. ஆகையால் இவர் சோமேசுரர் ஆலயத்தை வணங்கி இந்தப் பதிகம் பாடினுர் என்று கொள்ளத் தடை யென்ன?குடம் தங்க உறி காரணமாக இருந்ததினுல் காரண காரியம் என்பது காரோணமாக மருவி வழங்குகிறது, என்பர் சிலர். முருகன் எழுந்தருளியிருக்கும் மயில்வாகனத்

10964 3

தின் தலை இடபாலுள்ளது. துர்க்கை-விஷ்ணு துர்க்கையென நாமம்பூண்டுச் சங்கு சக்கரதாரியாக எருமைத்தலையின்றி விளங்குகிருள்.

17. மாளவேசப் படலம்.

மாளவ தேயத்திலே அங்குரசு என்னும் மறையோனுக்கு மூன்று புத்திரர்களுண்டு. ஒருவன் பிரகஸ்பதி. சோமேஸ்வரரை வழிபட்டுத் தேவர்களுக்கெல்லாம் குருவானுன். இவன் பூசித்த சிவலிங்கம் சோமேஸ்வர ஆலயத்தில் வடகிழக்கில், மேற்கு முகமாகவும், அம்மை மங்களநாயகித் தனிக்கோயிலில் தெற்குநோக்கியும் விளங்குகின்றுர்கள்.

18. சோழேசப் படலம்.

பராந்தகன் எனும் சோழவரசனுக்குப் புத்திரப் பேறு இல்லாமையால், வருத்தமுற்று, ஆசாரியனைப் போற்றிக் குறையிரந்து நிற்க, “சோமதீர்த்தமாடி, சோமேசுரரை வழிபட்டு லிங்கம் சமைத்துப் பூசிப்பாயாகில் புத்திரனுண்டாகும் என்றும், மாசிமக விழாவையும் சிறப்பாக நடத்தவேண்டுமென்றும் கூறியருளினுர். அவ்வாறே இங்குற்று புண்ணிய தீர்த்தமாடி சோமேஸ்வரரை வழிபட்டு லிங்க பிரதிஷ்டைசெய்து பூஜிக்க, இவனுக்கு ஓர் புத்திரன் தோன்றினுன், இது சோமேஸ்வர ஆலயத்தில் வடமேற்கு மூலையிலுள்ளது. திரிபுர சுந்தரி அம்பாள் முன் மண்டபத்தில் விளங்குகிருள்.

19. நாகேஸ்வரப் படலம்.

அமுத கலசத்து வில்வம் விழுந்த இடம் வில்வ வனமாகி, அவண் தோன்றிய லிங்கத்திற்குக் கூவிளவனேச

னெனும் பெயர்பெற்று விளங்கிற்று. இப்பூமியைத் தாங்கும் ஆதிசேஷன், அனுதினமும் மெலிவுற்றுப் பூபாரம் சுமக்க ஆற்ருது வலியிழந்து மெலிந்து கவன்று கயிலாயஞ்சென்று சிவபிரானைச் சிந்தையிற் பதித்து, துதித்து தன் குறை யிரந்து நின்றனன். அதற்கு அவர் "கும்பகோணம் நண்ணி, கூவிளவனேசனைக் குறுகிப் பல மலர்களால் அருச்சிப்பாயாகில், நீ இழந்த வலியையும், தேஜசையும் திரும்பப் பெறுவாய்" என்றருளினர். அவ்வாறே தடங்கையுற்று விதிப்படித் தீர்த்தமாடிக் கூவிளவனேசனைப் பணிந்து போற்றி பன் மலர்களால் பூசித்துப் பல பகல் அருந்தவமியற்ற, இவன் புரியும் தவத்திற்கு மெச்சி ஸ்ரீ பார்வதி சமேத பரமேசுவரன் இடபவாகனரூடராய்க் காட்சி கொடுத்தருளினர். உடனே நாகமன்னன் இருக்கைவிட்டெழுந்து அடிபணிந்து, போற்றிப் போற்றி என்று பணிந்து பலவாறு துதித்து நின்றனன். பரமசிவன் "உனக்கு வேண்டும் பொருள் என்ன? உரைத்தி" என்று வினவினன். அதற்கு இவன் "இப்புவிதாங்கும் வலிமை இடையருது வேண்டுமென்றும், நின்தாட்கு அன்பும் அளித்தல் வேண்டுமென்றும், இத் தீர்த்தமும் நீவிரும் என்பெயரால் விளங்கல்வேண்டுமென்றும், இத்தீர்த்தத்தில் மூழ்கி நின்னைப் போற்றுவோர் நினைத்ததெல்லாம் அடைய அருளவேண்டுமென்றும் இறைஞ்சி நின்றனன். பரமன் விருமபியதெல்லாம் விரும்பியவாறே யளித்துத் தன் திருவுருக்கரந்தனன். அந்நாள்முதல் கூவிளவனேசன் நாகேசனென்றும், அரசு தீர்த்தம் நாகதீர்த்தமென்றும், பெயர்பெற்று விளங்கலாயின. இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து நாகேசரைப் போற்றுவோர் சர்ப்பத்திற்கு அஞ்சவேண்டுவதில்லை. சகல செல்வமும்பெற்று, இன்புற்று, மறுமைப் பயனையும்

அடைவர். பின்னர் ஆதிசேடன் சின்னாள் தங்கி, வலியும் தேஜசுமடைந்து தன் நகருற்று இனிது வாழ்ந்தான்.

நாகேசுரர்கோயிலில் கல்வெட்டுக்களில் திருக்கீழ்க்கோட்டமென்று குறிக்கப்பட்டிருக்கிறது. 1908-ல் பதிப்பித்த புத்தகத்தில் 13-வது நம்பரில் திருக்கீழ்க்கோட்டத்து பரமசுவாமி என்று இறைவன் பெயர் காணப்படுகிறது. மற்ற கல் வெட்டுகளிலும், திருக்கீழ்க்கோட்டத்துப் பட்டாரகர், திருக்கீழ்க்கோட்டமுடைய நாயனுர், திருக்கீழ்க்கோட்டத்துப் பெருமானடிகள் என்று குறிப்பிடப் பெற்றன, முற்றவெளியில் மயில் வாகனத்தின்மேல் விநாயகர் விளங்குகிருர். ஊர்த்துவத் தாண்டவமூர்த்தி கிழக்கு நோக்கியும், காளி மேற்கு நோக்கியும் சுதைத் திருமேனிகளாக விளங்குகிருர்கள். நடராஜ சபை ஒரு ரதம்போல் உருளைகளுடனுள்ளது. நாலு யானைகள். குதிரைகள் இழுக்கும் பாவனை. ஆரக்கால்கள் பூ வேலை கொண்டன. நடராஜருக்கு மால்வேணுகானம் செய்கிருர். சிவகாமி தாளம் போடுகிருள். இங்கு ஸ்படிகலிங்கத்திற்குத்தான் உச்சிக்காலத்தில் அபிஷேகம். கரங்களில் உடைவாள்,கேடயம், சூலம்முதலிய மூன்றுமுள்ளன. குஞ்சிதபாதத்திலுள்ள தண்டையில் ஆஞ்சநேயர் உருவமுள்ளது என்றும், நடனஞ்செய்கிறதனுல் கால்நோகும் என்று அஞ்சிய ஆஞ்சநேயர் நடனத்தை நிறுத்த முயன்ருர். பயனில்லை. அதில் தொங்கிக்கொண்டிருக்கிருர் என்று வரலாறு. இந்த ரதம் கயிலையிலிருந்து நேரே இறங்கியதாக வரலாறு. கல்வெட்டுக்கள் பல. அவற்றின் ஒப்புயர்வற்ற மகிமை இவண் விரிக்கின் பெருகுமென்று அஞ்சி விடுக்கின்றேன்.

சபையின் சன்னதியில் மேற்கே உச்சிஷ்ட விநாயகரும், கிழக்கில் ஊர்த்தாண்டவமூர்த்தி கற்சிலை உருவமும்

உள்ளன. கோயில் உட்பிரகாரத்தில் தென்கிழக்கில் படைவெட்டி மாரியம்மன் விளங்குகிருள்.

20. சூரியன் பூசைப்படலம்.

சூரியபகவான் சஞ்சையை மணந்து இரு மகவைப் பெற்று வாழும் நாளில், சஞ்சை வெயிலிற்காற்ருது, தன் நிழலை ஓர் உருவாக்கிச் சூரியன்பால் இருத்தி தன் தந்தை இல்லம் ஏகினுள். தந்தை கோபமுற்றுச் சூரிய கிரணங் களையெல்லாம் சாணையிலிட்டு அறைத்துக கலைகளை யெல்லாம் இழக்கச்செய்தனன். சூரியன் கடுந்துயருற்று கலைகளெல்லாம் இழக்கலுற்று, நடுநடுங்கி, மெலிந்து, வருந்துவாளுயினன். கும்பகோணம் நண்ணி, நாகேசுர ரைப் பூசிப்பையாகில் இந்நடுக்கமும் நீங்கி, இழந்த கலைகளையெல்லாம் ஒருங்கே பெற்று இன்புறுவாய் என ஓர் அசரீரி வாக்குப் பிறந்தது. உடனே சூரியன் குடந்தை நண்ணி நாகேசுரரைப் போற்றி, பெரிய நாயகியை வணங்கி, அம்மைமுன் ஒரு தீர்த்தமுண்டாக்கி அதில் நீராடி, நெடுநாள் பூசித்தான். பரமன் காட்சிகொடுத்து வெங்கதிர்களையும் அளித்து, நடுக்கம்நீங்கப்பெறச்செய்து சஞ்சைக்குப் பேராற்றலையும் தந்து, வேண்டும் வரமென்ன என்ருர். அதற்குச் சூரியன் "இத்தீர்த்தம் என்பெயரால் விளங்கவேண்டுமென்றும், இதில் மூழ்குபவர் எல்லாம் சித்தியும் பெறுதல் வேண்டு"மென்றும் வேண்டினன். அவ்வாறே பரமன் தந்தருளித் தன் திருவுருக்கரந்தனன். சித்திரை மாதம் 11, 12, 13 தேதிகளில் சூரியபூசை நாகேசுரர் ஆலயத்தில் நடைபெறுகிறது.

21. பகவந் தீர்த்தப் படலம்.

திருமறைக்காட்டில் பகவன் என்பவன் ஒருவன் வசித்து வந்தான். சிவனை நாடோறும் போற்றும் பேறுடையவன். தாய் இறக்க, அஸ்தியைக் கங்கையில்விட சிறுவனுடன் புறப்பட்டான். கும்பகோணம் காவிரிக் கரையில், தான்கொண்டுவந்த அஸ்திக்குடத்தை மரத்தில் தூக்கிக்கட்டிச் சிறுவனைக் காவல் வைத்து தீர்த்தமாடி கும்பேசர் முதலிய பலரையும் போற்றித் திரும்பிவந்தான் இதற்குள் சிறுவன் அஸ்திக்குடத்தை அவிழ்த்துப் பார்த்தான். அது மணம் நிறைந்த புஷ்பமாக விளங்கிற்று. அதை மறுபடியும் முன்னிருந்ததுபோலத் தூக்கிக் கட்டினான். பின்னர் இருவரும் காசிசென்று பார்க்கையில் அது அஸ்தியாகவே இருந்தது. சிறுவன் கண்டதைக் கூற, இருவரும் அஸ்திக்குடத்துடன் இங்குவந்து அதே இடத்தில் பார்க்க, அது புஷ்பமாக இருந்தது. காவிரியில் இட்டு இந்நகர் தங்கித் தீர்த்தமாடி ஈசனைப்போற்றி முத்தி பெற்றான்.

22. அபிமுகேசர் மகிமைப் படலம்.

மகாமக தீர்த்தத்திற்குக் கீழ்பால், கும்பத்தின் தேங்காய் விழுந்த இடத்தில் தோன்றியது ஒரு லிங்கம். இதற்கு நாளிகேசுரன் என்று பொருள். நாளிகேசுரம் என்றால் தேங்காய் என்று பொருள். கிழக்கு முகமாயுள்ளது, மேற்குமுகமாகத் திரும்பிய வரலாறு முன்னர்க் கூறப்பட்டது. காஷ்மீர் தேயத்திலே வேதங்களைக் கற்று மிகப் புகழ்பெற்ற சுதவன் என்று ஒருவன் இருந்தான். மனைவி சீதவதி பிள்ளைப் பேறில்லாமல் அநேக தானதருமங்

களைச்செய்து சுமதி என்கிற ஒரு பெண் மகவைப் பெற்ருள். இப்பெண் மணப்பருவம் வருங்கால் குட்ட நோய் வந்தடைந்தது. தாய் தந்தையர்கள் வருத்தமுற்றிருக்கையில் நாரதமுனிவர் வந்தார். தங்கள் குறைகளைக் கூறி வேண்ட, இதற்கு அம்முனிவர் "குடந்தையுற்று மகாமக தீர்த்தம் விதிப்படி ஆடி அபிமுகேசுரரை வழிபடின் நோயகலு"மென்ருர். அபிமுகேசுரர் கனவில் தோன்றி, "குட்டநோய் அகலும், அழகும் பெறுவாய், நம்முன் கல்யாணம்செய், தீர்க்கதவன் என்று ஒரு மகன் பிறப்பான்" என்ருர். அவ்வாறே செய்து மகவுபெற்று முத்தி அடைந்தான்.

23. பாணபுரேசப் படலம்.

வேட வடிவங்கொண்டு எழுந்தருளிய இறைவன் நின்ற இடமே பாணபுரேசம் எனப்படும். திருமாலே பரம்பொருள் என்று வியாசர் கூற, நந்தியின் சாபத்தால் தூக்கிய கை அசையாமல் நின்றது. திருமால் உபதேசப்படிச் சிவமே பரம்பொருள் என தெளிந்து, இப்பாணபுரீசுவரரை வழிபட்டுச் சாபம் நீங்கப்பெற்ருன். வங்க தேசத்தரசன் சூரசேனன் மனைவி காந்திமதி குட்ட நோயுற்று மிகத் துன்பப்பட்டாள். அவள் குடந்தையுற்றுப் பாணபுரீசரை வழிபட்டு நோய் நீங்கி, ஒரு புதல்வனைப் பெற்று தனது தேசம்சென்று இனிது வாழ்ந்தாள்

24. மாலவதி வனப்படலம்.

சிவபெருமான் திருவடியே மனத்திற்கொண்ட நிசாகரன் என ஒருவன் இருந்தான். அவனது புத்திரன் தூமகேது. இவனும் சிவனடி மறவா அன்பன். நல்ல சிவ

புண்ணியத்தால் கும்பகோணமுற்று மகாமகத்தீர்த்தமாடி கும்பேசுரரைப் போற்றினன். கும்பேசத்திற்குத் தென் மூலையில் மாலவி வனங்கண்டான். ஒரு சிவக்குறியைக் கண்டு பூசிக்க எண்ணமுற்று தீர்த்தமாடிப் பூசித்தான். பரமன் காட்சி தந்தருளினர். உடனே வணங்கிப் போற்றி "தேவரீர் விசுவநாதன் என்றும், மலர்க்குழலாள் ஆனந்த வல்லியென்றும், தீர்த்தம் தூமகேது என்றும் விளங்க வேண்டுமென்று" கேட்க, அவ்வாறே அருளித் திருவுருக் கரந்தாரர். பங்குனி மாதம் பௌர்ணமிகூடிய விருஷப லக்கினத்தில் தீர்த்தமாடுவோர் இம்மை, மறுமைப் பயன் களை அடைவர்.

---

25. கரும்பாயிர விநாயகப் படலம்.

இவ்விநாயகர் வராக தீர்த்தத்திற்கு மேல்பால் சிறக்க அமர்ந்துள்ளார். கரும்பு வியாபாரி ஆயிரம் கரும்புகளை இங்கு கொண்டுவந்து நன்குற அடுக்கினன். விநாயகர் வேதியச் சிறுவன் உருக்கொண்டு அவ்வணிகன் முன் தோன்றி, ஆசி ஏற்றி என்று கூறலும், அவன் செவி கொடாது, வந்த காரியம் என் என்றான். சிறுவர், "என் னிடம் பொருள் இல்லை, கரும்பு ஒன்று கொடுத்தால் திருப்தி, உனக்கும் விக்கினமில்லை" என்று கூறினர். வணிகன் "இங்கு விலைப்பொருட்டாக வந்தேனேயொழிய பார்ப்பனச் சிறுவனுக்குக் கொடுக்க வந்தேனல்லன். போ, போ" என்று கூறினன். அதற்கு அவர், "உன்னிடம் கரும்பு வாங்காது நீங்கேன்" என்றார். வணிகன் கோபங் கொண்டு "போ, போ" என்று அரற்றினன். அதற்குச் சிறுவன், "பொருளாசையுற்றோர் மெய்ப்பொருள் கொள் ளார். கொடுக்காவிடின் நானே கொள்வேன்" என்று

கூற, வணிகன் மிகச் சினந்து, "இங்கு நின்றால் நையப் புடைப்பேன்" என்றான். சிறுவன் ஒரு கரும்பைத் தொட்டான். வணிகன் கோபித்தான். மறுமுறையும் ஒன்றுதொடச் சீறிக் கோபித்தான். இவ்வாறு பலகால் தொட, அவன் கோடாமைகண்டு சிறுவன் கோவில் புக்கனன். கரும்பெல்லாம் சாரமற்றிருந்தது. வணிகன் "ஐயோ ஒன்றுகொடுக்க மறந்தேனே! விநாயகக் கடவுளென்று அறியாது கெட்டேன்" என்று கோயிலையடுத்துப் "போற்றி அருள்புரியுமாறு வேண்ட" உடனே விநாயகர் பிரசன்னமாகி அருள் புரிந்து, அவைகட்குச் சாரத்தையும் விளைத்தனர். வணிகன்வழிபாடாற்றி இன்புற்றான்

---

26. கவுதமேசப் படலம்.

மகாமக தீர்த்தத்திற்கு மேல்கரையில் கும்பத்தில் விளங்கின உபவிதம் விழுந்த இடத்தில் முளைத்த லிங்கம் உபவீதேசர் என்னும் பெயர் பெற்றது, கவுதம முனிவன் வெண்ணீறணிந்தும், ருத்திராக்ஷம் பூண்டும், ஐந்தெழுந்தையுமன்போடு மனனம் செய்பவன். மனைவி அகலிகை. இருவரும் இல்லறம் நடத்தும் நாளில், வேதியர்களுக்கு அன்னம் அன்போடு அளித்துச் சிவபெருமான் எழுந்தருளியிராநின்ற தலங்கள் தோறும் மனைவியுடன் சென்று பணிந்தான்.

சீகாழிக்குத் தரிசனத்திற்கு வருமளவில் பஞ்சமுற்றது. எல்லோரும் பசி பசி என்று அலறினார்கள். இதைக் கண்டு இறங்கி அங்குற்று, பஞ்சம் நீங்கும்வரையில் எல்லோருக்கும் அன்னமிட்டு மகிழ்ந்திருந்தான். இதில் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்க எண்ணி மாயையால் ஒரு

பசுவைச் சமைத்து அதை முனிவனிடம் அனுப்ப, அவன் தடவிக்கொடுக்க, இறந்தது. பசுக்கொலை முனிவனுக்கு வந்ததென்று குற்றங்கூறி நீங்கினூர்கள். துர்வாச முனிவர் கூறியபடி குடமூக்குற்று, ஒரு தீர்த்தமுண்டாக்கி அதில் மூழ்கி, உபவீதநாதரை வணங்கி வருகையில் பரமன் ரிஷபவாகனரூடராய்க் காட்சி கொடுத்தார். அதற்கு முனிவர் என் துன்பம் நீங்க வேண்டும். இத்தீர்த்தமும் தேவரீரும் என்பெயர்கொண்டு விளங்கல்வேண்டும் என்று இரந்து நின்றூர். அவ்வாறே அருளித் திருவுருக்கரந்தார். அவ்வாறே கவுதம தீர்த்தமென்றும், உபவதீசுரர் கவுதமேசுரர் என்றும் வழங்கலாயின. முனிவன் கற்சிலை பிரகாரத்தின் தென்மேற்கு மூலையிலுள்ளது.

27. ஆராவமுதப் படலம்.

மேரு மலையின் ஒரு சிகரத்தில் மாயோன் இலக்குமியைக் குறித்துத் தவம்செய்தான். ஏமரிஷியும் இலக்குமியைக்குறித்தும் தவமியற்றினுன். மாயோன் ஏமரிஷி முன் தோன்றி வேண்டுவதென்என்றுன். முத்திவேண்டுமெனக் கூறினுன் முனிவன். கும்பகோணம் சென்று அமுதவாவியில் தீர்த்தமாடி வடகரையில் தவம்புரிதி, என்று மறைந்தான். அவ்வாறே குடந்தையுற்று தவம்புரிந்தான், மாயோன் நித்திரை தெளிந்து எழுந்தனன். இலக்குமி தோன்றி, ஏமரிஷிக்குரைத்தது என் என்றுள். நீ கும்பகோணம் சென்று அமுதவாவியில் மூழ்கி, பொன்தாமரையில் குழவியாக வளர்தி. முனிவன் உன்னை எடுத்து வளர்ப்பான். நீயும் தவம்புரி. உன்னை மணந்து, முனிவனுக்கும் முத்தியும் கொடுப்போம் என்றுன். அவ்வாறே வளர்கையில் மாயோன், கும்பகோணம் அடைந்து ஏம

ரிஷி உறையுள் அடைய, பெண்ணை மணம்செய்து கொள்ளுமாறும், முத்தியும் வேண்டுமென்றான். மாயோன், பெண் கோமளவல்லியை மணம் பூண்டு முனிவனுக்கு முத்தியும் நல்கினான். உற்சவ காலத்தில் யானை வாகனத்தின்மேல் எழுந்தருளி, மாலை மாற்றி மணக்கோலம் கொண்டாடுகிறார்கள். விமானம் வைதீக விமானம். சயனத் திருக்கோலம். கோபுரம் பதினொரு அடுக்குகளை யுடையது. கோபுரம்கண்ட மெய்வாசல் உடையாருக்குத் தீபாவளி அமாவாசையில் திதிக்கொடுக்கிறார். கோயில் அமைப்பு இரதம்போலுள்ளது. சக்கரமுள்ளது. யானையும் குதிரையும் இழுப்பனபோல் விளங்குகிறது. பல்லவத் திருப்பணி. ஆராவமுதென்றும், சாரங்கபாணி என்றும் அழைக்கப்படுகிறார். ஆழ்வார்களுடைய மங்களாசாசனம் முப்பத்திரண்டு.

28. சுதரிசனப் படலம்.

முனிவர்கள் இந்நகர் அடைந்து தீர்த்தங்களாடி கும்பேசுரர் முதலிய பலரையும் போற்றிப் பல பல யாகங்கள்செய்து இன்புற்று வாழும் நாளில் அவுணர்கள் அழுக்காறுற்று யாகங்களை அழிக்க எண்ணிப் பூதப் பிரேத பைசாச பல உருவங்கள் கொண்டு யாகத்தை அழிக்கத் துடங்கினர். முனிவர்கள் எல்லாம் கும்பேசுவரரை வணங்கி முறையிடலும், மாயோனை நினைத்தார். மாயோன் கும்பேசுரரை வணங்க, அவர் "சலந்தரனைக் கொன்ற சுதரிசனப்படை காவிரியிலுள்ளது. அதை எடுத்து, நீயும் அதனுள் புகுந்து அசுரர்களை அழித்து யாகங்களைக் காப்பாற்றுவாயாக" என்றுகூறினர். உடனே அப்படையை எடுத்துத் தானும் உட்புகுந்து அவுணர்

களைச் சின்னபின்னமாக அடித்துப் பெரும்போர் இழைத்தலும், படையின் ஒளி மேல்மேலோங்கச் சூரியன் ஒளியையும் ஒருங்கே இழுத்துவிட்டது. சுதர்சன ஒளியோ தணியவில்லை. சூரியன் ஆராவமுதனிடம் முறையிட, சக்கரத்தில் ஆவாகனம்செய்து பூசிப்பாயாகில் ஒளி பெறுவாய் என்றலும், அவ்வாறே செய்து ஒளிபெற்றான். சக்கரபாணி என்று பெயர் பெற்றது. பாஸ்கர க்ஷேத்ரம் எனப்பெயர்பெற்றது. இதற்குத் திரிநேத்தரதாரி என்று பெயருண்டு. உருத்தராம்சம். தேவிபெயர் பார்வதி. சிவனுக்குரிய பத்திர புஷ்பங்கள் எல்லாம் இவருக்குரித்தது. விபூதிபிரசாதமுமுண்டு.

29. வராகப் படலம்.

நெடுமாலைக்காண முனிவர்கள் வைகுந்தம் சென்றனர், ஜய-விஜயன் என்பவர்கள் தடுத்தார்கள். மாயோன் உணர்ந்து அசுரர்களாகும்படி சபித்தனர். இவ்விருவரும் இரணியாக்ஷகன், இரணியகசிபு என்று பூமியில் பிறந்தார்கள். மாயோன் முனிவர்களுடன் வீற்றிருந்தனர். பூமியில் பிறந்த இருவரும் தவம்செய்து அநேக வரங்களைப் பெற்றனர். வானவர்கள் வருந்தினார்கள். இரணியாக்ஷகன் பூமியைச்சுருட்டிப் பாதாளத்தில் அழுத்தினன். வானவர்கள் மாயோனிடம் முறையிட, அவர் வராக உருக்கொண்டு, பாதளத்தினுள்சென்று ஒரு மருப்பினால் அசுரனைக்கொன்று, மற்றொரு மருப்பினால் பூமியை எடுத்து மேலெழுந்தனன். எழுந்த இடம் கும்பகோணம். துளைத்தவிடம் வராக தீர்த்தம். இதற்குக் கீழ்பால் வராகர் திருக்கோயில் கொண்டுள்ளார்.

30. வரதராஜப் படலம்.

இது காவிரீக்கு வடபாலுள்ளது. மதங்கமா முனிவர் சேது, குடந்தை, காஞ்சி என்கிற தலங்களைத் தினந்தோறும் வணங்கி உண்ணும் நியதி பூண்டவர். ஒருநாள் இத்தலத்தில் வணங்கி, காஞ்சிக்கு ஏக முற்படுகையிலே மழை இடைவிடாது பொழிய, வருத்தமுற்று உயிரை விடத் துணிந்திருக்கையில் வரதராஜப்பெருமாள் கருடவாகனத்தில் காட்சிக் கொடுத்தருளி, அவண் திருக்கோயில்கொண்டெழுந்தருளினர். காவிரியில் தீர்த்தம் கொடுக்கிற நியதியுண்டு.

31. இராமசாமிக்கோயிற் படலம்.

இது கடைத்தெருவின் தென்கோடியிலுள்ளது. கோவிந்த தீக்ஷிதர் திருப்பணி. உட்பிரகாரத்தில் இராமாயணம் முழுவதும் சித்திரங்களால் எழுதப்பட்டிருக்கிறது. இராமர், சீதை, இலக்குமணர் முதலிய மூர்த்திகள் உள்ளே விளங்குகிறார்கள். மகாமண்டபத்தில் உயிர்ச் சிற்பங்களாக துவாரபாலகர், சீரங்கநாதன், ஆண்டாள், வேணுகோபாலன், விபீஷண சுக்ரீவ பட்டாபிஷேகம், திருவிக்கிரம அவதாரம், மாயா மான்வேட்டை, முதலிய சிற்பங்கள் கண்ணைக் கவருகின்றன.

32. கைலாயநாதப் படலம்.

கேதார தேசத்திலே, பிப்பிலாதவன் என்று ஒரு முனிவன் இருந்தான். வேதமோதிப் பஞ்சேந்திரியங்

களைவென்று சிவபிரானைக் குறித்து நெடுநாள் மகத்தான தவம் இயற்றினன். பரமன் அகமகிழ்ந்து காக்ஷிதந்து, "என்னவரம் வேண்டும்" என்ருன். கைலாயத்தில் ஸ்ரீ பார்வதி சமேதராகத் தேவரீர் அமருங்கோலம் அடியேன் காண அருளல்வேண்டும்" என்ருன், அதற்கு அவர் குடந்தையுற்று மகாமகத் தீர்த்தமாடிக் கும்பேசரைப் போற்றுவாயாகில் காட்சி யளிப்போம் என்ருர். அதற்கு அவர் "முதிர்ந்த வயது, தளர்ந்த தேகம், ஏக வலிமை யுடையேனல்லன்" என்று கூறலும், அதற்கு அவர் ஒரு பொய்கையைக் காட்டி "மூழ்கு" என்றலும், முனிவன் முழுகக் கும்பகோணத்தில் காசிப தீர்த்தக்கரையில் மேல் எழுந்தான், இது என்ன நகரம் என்று வினவலும், குட மூக்கு என்ருர்கள். அகமகிழ்ந்து மகாமகத் தீர்த்தமாடிக் கும்பேசுரரைப்போற்றி கைலாயக்காக்ஷியைத் தந்தருள்க என்றலும், அண்ணல் காவிரிக்கு வடபால் சண்பகாரண்ணியத்தினடுவிலே வெள்ளியங்கிரி தோன்றலும், பொன் கோபுரமும், மதிலும், அத்தாணி மண்டபத்தின் நடுவிலே தங்குழாங்களோடு நந்தி பொற்பிரம்புகொண்டு விலக்க, உமை இடபாகத்தில் மேவ, பரமசிவன் கைலாயக்காக்ஷியை தந்தருளினர். முனிவர் ஆனந்த சாகரத்தில் மூழ்கிப் பலவாறு துதித்துநிற்க, பரமன் கைலாயநாதர் என்று பெயர்பூண்டு ஒரு லிங்கமாக விற்றிருந்தனன். முனிவன் அவன் அருளால் முத்தியுற்ருன்.

33. ஏனைய கோயிற்படலம்.

சைவக்கோயில்கள்:- காளஹஸ்தீச்சுரர், ஏகாம்புரீசுவரர், பழநி ஆண்டவர், குமரர், உச்சிப்பிள்ளையார், வீரபத்திரர், ஐந்துகாசிவிசுவநாதர். (சோலையப்பன்தெரு,

பக்தபுரீசுரப் படித்துறை, தாராசுரம் பாலக்கரை, வினை தீர்த்த அக்கிரஹாரம், செட்டிப் படித்துறை.) நகரம் எங்கும் விநாயகர் ஆலயங்கள்

வைணவக் கோயில்கள் :- பாதாள வெங்கட்டரமணர், இலக்குமி சரநாராயணர், கோபாலர், பிரமன், வேதநாராயணர், யோக நரசிம்மமூர்த்தி, தசாவதாரர், கூரத்தாழ்வார், பாஷியக்காரர், திருமிழிசையாழ்வார், முதலிய சந்நிதிகள். நகர் எங்கும் ஹநுமார் கோயில்கள்.

34. மௌனசுவாமிப் படலம்.

சுவாமிகளைப் பாலியத்தில் இந்நகர் வரும்போதெல்லாம் நேரில் கண்டு தரிசிக்கும் பேறுடையேன். செம்மேனியுடையவர். உள்ளக்கண்ணேக்கும் அறிவுடையோர். ஊன்கெடு மார்பினர். என்பு எழுந்த யாக்கையர். பகல் பலவுடன் கழிந்த உண்டியர். காமம், சினம் கடிந்த காக்ஷியர். விருப்பு வெறுப்புமற்றவர். நேர்வாளம் உண்டு ஊறுபடாது விளங்கிய மகான். சிவமெனும், தானெனும் மயலகற்றித் தானே சிவமாய், சிவமே தானாய் விளங்கிய முனிபுங்கவர். இந்நகர்வாசிகள் விருப்பத்திற்கிணங்கி திருபுவனமிருந்து இங்கு எழுந்தருளினார்கள். காலை மாலை அன்பர்கள் சென்று வணங்கி வந்தனர். ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் இவரைத்தரிசித்துச் சென்றனர். இவர் பூர்ண நிர்வாணி. விகாரி ஆண்டு சித்திரைத்திங்கள் 11ம்நாள் (22—4—1899) சனிக்கிழமை உத்திர நக்ஷத்திரத்தில் இரவு பத்துநாழிகையளவில் பரிபூரண மடைந்தார்கள். செய்யும் சடங்குகள் பரிபூரணமாக விமரிசையுடன் நடந்தன. சிவலிங்கப்பிரதிட்டை செய்யப்பட்டிருக்கிறது. கோயில் கீற்றுக்கொட்டகையாகஇருந்து வருகிறது. சைவமக்கள் முயன்று கற்றளியாக்க ஈசன் அருள்புரிவாராக.

சங்கராச்சாரியார் அவர்கள் மடம், குன்றக்குடி அடிகளார் மடம் இரண்டுமுள்ளன.

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம்.

இப்பெருங்கூட்டம் இங்குத் தோன்றி எட்டாண்டுகளாகப் பிரதி ஞாயிறு தோறும் பல தலங்களுக்குச் சென்று சிவ வழிபாடாற்றி வருகிறது. ஆண்டுவிழா சென்ற டிசம்பர் மாதக் கடைசியில் மூன்று நாட்கள் திருக்கூட்டத்துடன் வீதிவலம் வந்து கோயில் வழிபாடாற்றுவதுடன் குப்பேசர் கல்லியாண மண்டபத்தில் மூன்று நாளும் அருள்பெறும் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. திருமுறை அலங்காரமும், நால்வர் அலங்காரமும், கண்கொள்ளாக காட்சியாக விளங்குகின்றன. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசு முதலியவர்கள் திருக்கூட்டத்துடன் சென்று வழிபாடாற்றினதைப் புராணங்களில் காண்கிறோம். இந்நகரில் இக்காட்சியைக் கண்ணாரக்கண்டும் காதாற் சிவ முழக்கம்கேட்டும் அன்புற்றும், இன்புற்றும் அகமகிழ்கிறோம. இதைக் கயிலைக் காட்சியென்றே பலர் ஆனந்த சாகரத்தில் மூழ்கித் திளைத்து பரவசமடைகிறார்கள். இத்திருக்கூட்டம் பல்லாண்டு வாழ்க வாழகவே!

இத்தலத்தின் மான்மியத்தை அறிந்துகொள்ளாத மனிதர்கள் மிருகங்களே யாவார். பூமிபாரமாக இருப்பவர். உடம்பின் பயனை அடையாதவராவார். அவர்கள் நீர் சோறு இவற்றைக் கொன்றவராவார். நடைப்பிணமாவார். இதை விருப்பிக் கேட்போர், சொல்லுவோர் வேதங்கள் கேட்ட பயனையும், புண்ணிய தீர்த்தங்களில்

ஆடின பலனையும், யாகம் செய்த பலனையும், 1008-சிவ க்ஷேத்திரங்களைத் தரிசித்த பலனையும், பிரம்மா விஷ்ணு பதவிகளையும், அடைந்து சிவானந்தத்தில் மூழ்கியிருப்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்!!!

"குடமூக்கே குடமூக்கே என்பீராகில் கொடுவினைகள்
தீர்ந்தரனைக் குறுகலாமே" — அப்பர்.

இன்னமா புராணந்தன்னை எழுதுவோர் எழுதுவிப்போர், பன்னருமன்பு பொங்கப்படிப்பவர் படிப்பிப்போர் மற்று, உன்னரும்பொருள்களாய்வோர் உரைசெய்வோர் பூசை செய்வோர், என்னருமளவில் செல்வம் இம்மையிற் கிடைத்து வாழ்ந்து.

மறுமையில் இந்திராதி வான்பதமெல்லாம்புக்காங்கு அறுதியில் போகந்துய்த்தே அளப்பருங் கயிலாயத்து, நிறுவியமேலா முத்திப் பதமொரு மூன்றுநீத்துத், தெறு வினையாளராகிச் சிவனோடு கலந்து வாழ்வார்.

உத்தமக் கும்பகோணப் புராணத்தை உவந்துதீட்டும் புத்தகம் வதியும் இல்வாய்ப்பொலி தருஞ்செல்வமெல்லாம், பெத்தம்விட்டொழியும் பூதப்பிரேத பைசாசமெல்லாம், தத்துவமுறைத்தேனென்றும் சந்ததிக் கானியின்றே.

முன்னுபுகழ் சோணாடு வாழ்க, திருக்குடந்தையெனு மூதூர் வாழ்க, மன்னுபெருஞ் சைவமிகவாழ்க, இடைமருதர் முதல்வானோர் வாழ்க, பன்னுதிரு மங்களநாயகி வாழ்க, கும்பேசர் பண்பு வாழ்க, மின்னுதிரு அம்பலத்துளவரெடுத்த குஞ்சிதத்தாள் மேன்மேல் வாழ்க.

முற்றிற்று.

ஆசன விளக்கம்.

ஆசனப் பயிற்சியே அருநோய் அணுகா
ஆசனப் பயிற்சியே அருநோய் அகற்றும்
ஆசனப் பயிற்சியே அருந்தவம் அளிக்கும்
ஆசனப் பயிற்சியே அளவில் ஆனந்தம்.



பத்மாசனம்,

பத்மாசனம் :- இடது துடையின்மேல் வலது பாதத்தை வைத்து, குதிகால் வயிற்றில் படும்படி செய்யவும். இதைப்போல, வலது துடையில் இடது பாதத்தை வைத்து, குதிகால் வயிற்றில் படும்படிச் செய்யவும். முதலில் கஷ்டமாக இருக்கும். ஒரே பாதத்தை

வைத்துப் பழகிப்பிறகு மறுபாதத்தைப் பழகலாம். பழகப் பழக படத்தில் காண்பதுபோல் வந்துவிடும். முதுகு எலும்பை வளைக்காமல் நேரே நிமிர்ந்தும் வலதுகையை சின்முத்திரையோடு வலது முழங்கால்மேல் வைக்கவும். இடது கையை இடது முழங்கால்மேல் வைக்கவும். 72,000 நாடிகளுக்குப் பயிற்சிகொடுத்து நல்ல இரத்தம் தேக முழுதும் பரவச்செய்யும். சகல நோய்களையும் அகற்றும்.



சர்வாங்க ஆசனம்

2. **சர்வாங்காசனம்:-** மல்லாந்து படுத்து கால்களை மடக்கி வயிற்றில் வைத்து இடுப்புக்குக் கீழுள்ள பாகத்தைக் கைகளால் தாங்கி உயரத்தூக்கி, கால்களை நேரே

படத்தில் காட்டியபடி நீட்டவும். இந்த ஆசனம் ஒன்றே சர்வாங்கங்களுக்கு வலுவைக்கொடுத்து இரத்த ஓட்டத்தை ஒழுங்குறச்செய்யும். கழுத்துக்குள்ள காய்களைப் பலப்படுத்தி உடலுக்கு நலத்தை அளிக்கும். மலச்சிக்கல், வயிற்று நோய், விந்தழிவு, நீரழிவு, அஜீரணம் இவற்றைப் போக்கும். இந்த ஒரு ஆசனத்தை யாவரும் (வயதானவர்களும்) செய்யலாம்.



மத்ச்யாசனம்,

3. **மத்ச்யாசனம்:-** பத்மாசனம்போட்டு பின்னல் படுத்து குரல்வளையை நன்ருய் வளைத்து கழுத்தைப் பின்னல் தள்ளித் தலையை உள்பக்கமாகக் கொண்டுவந்து முதுகை உயரக்கிளப்பி உச்சியை தரையில் பொருந்தும்படிச்செய்து கைகளை முன்கொண்டுவந்து கால்விரல்களைப் பிடித்துக்கொள்ளவும். கழுத்து, தோள், பிடரி முதலியவற்றிற்கும் பலத்தை அளிக்கும்.



அர்த்தமச்சியேந்திராசனம்.

4. **அர்த்த மச்சி யேந்திராசனம்:-** உட்கார்ந்து இடது பாதத்தை வலது அடித்துடையில்சேர்த்து முழங் காலை துடைக்கு நேராகவைத்து வலது காலைத் தூக்கி இடதுகாலின் மேல்பாகமாகக்கொண்டுவந்து வலது குதி காலை இடது துடையின் வெளிப்பாகமாகசேர்த்து, வலது காலை மார்போடு நிறுத்தி இடது அக்குகளுக்குள் வலது முழங்காலை வைத்து, இடது கையால் வலது முழங் காலைப் பிடிக்கவும். வலது கையை முதுகின் பிற்பாக மாக கொண்டுவந்து வலது கணுக்காலை வலது கைவிரல் களால் கொக்கிபோல் பிடித்து இடுப்பை வலதுபுறமாக நன்ருகத் திருப்பி முகத்தை வலது பக்கமாகப் பார்க்க வும். இதைப்போல் அடுத்த கைக்கும் செய்யவும். வயிறு சம்பந்தமான வியாதிகளைப் போக்கும்.

இந்த ஆசனமும், அடுத்த ஆசனமும் பயிற்சிக்குக் கடினமாயுள்ளன. பயிற்சியாளரைப் பார்த்துத் திருத் திக்கொள்ளவும்.



பூர்ண மச்சியேந்திராசனம்.

P. D. Ratanasami Pillai,

(Rtd. Head Post Master, Kumbakonam.)

depiciting 'Purna Matsyendrssan' a very difficult Yogic pose of great chiropractic value. He is now an adept and a finished pupil of Yogic School of Physical Culture

5. **பூரண மச்சியேந்திராசனம்:-** உட்கார்ந்து வலது பாதத்தை இடது துடையின் மேல்வைத்து வலது முழங்காலை நேராக பூமியில்படும்படி வைத்து, இடது காலைத் தூக்கி வலது முழங்காலின் மேற்குப் பக்கமாகக் கொண்டுவந்துவைத்து வலது அக்குகளுக்குள் இடது முழங்காலை வைத்து, வலது கையை இடது பாதத்தின் மேல் பூமியில் படும்படிவைத்து, இடது கையை முது

இன் பின்புறமாகக் கொண்டுவந்து இடதுகையால் முதுகை நன்றாகத் தேய்க்கவும். தலையை இடதுபுறம் வலதுபுறம் அசைக்கவும். கழுத்து, முதுகு, அடிவயிறு, கை கால், இடை, தொப்புள் இவைகளுக்கு வலுவு உண்டாகும். சுரக்கட்டியை கரைக்கும் ஜாடராக்கினியை உண்டாக்கும். முதுகை வலது இடது பக்கம் நன்றாகத் திருப்ப முயலவேண்டும். துடை, முழங்கால், கணுக்கால் இவைகளை கைகளால் அழுத்தித் தேய்த்து பழகலாம். இவ்வாசனமும் எல்லா வியாதிகளையும் போக்கும் தன்மை வாய்ந்தது.

6. **சவாசனம்:-** மல்லாந்து படுத்துக் கால்களை ஒன்றாகக்கூட்டி குதிகாலை ஒட்டிவைத்துக் கைகளைத் துடை வெளிப்பாகமாகத் தளரும்படிச்செய்து, முகத்தை நேரே வானத்தை நோக்கும்படியாகவைத்து சரீரம் முழுவதும் தளர்ந்திருப்பதாக நினைத்து மனம் சிந்தனையற்றிருக்க வேண்டும். சுவாசத்தைச் சாதாரணமாக இழுத்து விட வேண்டும். காலிலிருந்து தலைப்பாகம் வரைக்கும் ஒவ்வொரு அங்கங்களையும் தளர்ந்ததாகப் பாவித்து தண்ணீரில் மூழ்கினவன்போல் ஆன்மாவைப் பாவிக்கவும். "ஓம் சாந்தி சாந்தி சாந்திஹி" என்று சொல்லிச் சரீரத்தை முற்றிலும் மறந்துவிடவேண்டும். பிறகு கை கால்களை அசைத்து தேகத்தை வலது இடதுபக்கம் திருப்பி எழுந்திருக்கவும். களைப்பு நீங்கி அமைதி உண்டாகும்.

காலையில் தந்த சுத்திசெய்து ஆசனங்களைப் பழகலாம். மாலையிலும் செய்யலாம். ஆகாரத்திற்கு நான்கு மணி கழித்தும், சிற்றுண்டிக்கு 3-மணி கழித்தும் செய்ய வேண்டியது, வெறும் வயிறாக இருக்கவேண்டும். உடற்பயிற்சி இத்துடன் கலந்து செய்யக்கூடாது. 1, 2, 3, 6 இந்த ஆசனங்களை நன்றாகப் பழகி, தேகம் வலுவடைந்த பிறகு 4, 5 ஆசனங்களைப் பழகுவது நலம். முரட்டுத் தனமாக பழகக்கூடாது. மெதுவாகப் படிப்படியாகச்செய்ய வேண்டும். ஆண், பெண், இளைஞர், முதியோர் யாவரும் செய்து பயன்பெறலாம். உடலை அசட்டை செய்யாமல் ஆசனங்களின் மூலமாக உறுதி ஆக்கவேண்டும்.

அனேக மூலிகைகளினுல் தயாரிக்கப்பட்ட

சித்தர் தைலம்.

இதை ஸ்நானஞ்செய்துவந்தால் உஷ்ணத்தினுல் ஏற்படும் மூளைக்கொதிப்பு, தலைவலி, மயக்கம், கண்களில் ஏற்படும் நீர் சம்பந்தமான வியாதிகள், மயிர் உதிர்தல், தலை வழுக்கை, பொடுகு, கீல்வாய்வுகள் மேகநீர் சம்பந்தமான வியாதிகளும், மூலத்தில் கடுப்பு, நமச்சல், சொரிசிறங்குகள் குணமாகும்.

12 அவு. பாட்டில் விலை 2—8—0

6 அவு. பாட்டில் விலை 1—8—0

1 அவு. பாட்டில் விலை 0—4—0

தயாரிப்பவர்கள் :—

குட்வின் கம்பெனி, கும்பகோணம்.

கிடைக்குமிடங்கள் :—

ஜெனரல் பேப்பர் மார்ட்,

பொற்ருமரைத் தென்கரை, கும்பகோணம்.

N. கணேசன், *பிளாஸ்டிக் டாய்ஸ் மர்ச்செண்ட்,*

ராஜா டாக்கீஸ் சமீபம், கும்பகோணம்

நியூ தர்பார் முஸ்லீம் ஹோட்டல், கும்பகோணம்.

N. மகாலிங்கம், *பிளாஸ்டிக் டாய்ஸ் மர்ச்செண்ட்,*

ராஜா டாக்கீஸ் சமீபம், கும்பகோணம்.

உ

ஸ்ரீ தனலெக்ஷிமி அம்மையார்.



குடந்தை சிங்காரம் செட்டியார் தெருவில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். வாழ்க்கைத் துணைவியாக இருந்து இல்லறம் நடத்துகையில் பூர்வஜன்ம வசத்தால் திருவருள் வாய்க்கப் பெற்று மணாளனுக்கு தன்னைக் கோயில்கட்டி ஆராதிக்குமாறு உணர்த்த, அவ்வாறே கோயில் கட்டி, ஏழு ஆண்டுகளாக நித்யபூஜை செய்தும், குருபூஜை விசேஷமாகவும் அன்னதானத்துடனும் பிரபல மேள, இசைக்கச்சேரிகளும், கதாகாலக்ஷேபங்களும் நடந்துவருகின்றன. தரிசித்த மாத்திரத்தில் நோய்கள் நீங்கியவர் பலர். செல்வமுற்று வாழ்பவர் பலர். தரிசித்துச் சென்றாலே காரியங்கள் கைகூடும். திரள் திரளாக வந்து தெரிசித்துச் செல்லுகிறார்கள். தரிசித்து உய்வோமாக.

V. சோமு படையாட்சி,
ஸ்ரீ தனலெக்ஷிமி அம்மாள் பாத்திரக்கடை,
சிங்காரம் செட்டியார்தெரு, கும்பகோணம்.

20-ஆண்டுகளாக எங்கும் புகழ்பெற்ற

— அற்புத சஞ்சீவி —

“ஜெயராம்”

காயசுத்தி லேகியம்

(REGED.)

இரண்டே வேளையில ஆச்சரியமான குணம்தெரியும்
ஆயிரக்கணக்கான நற்சான்றுகள் பெற்றது,



தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, கழுத்துப்பிடரிவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்சு எரிச்சல், அஜீரணம், வயிற்றுப்பிசம் தீராத வயிற்று வலி, இடுப்பு வலி, இரைப்பை ரணம், கிருமிகளின் உபாதை, நாள் பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டி சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்கு புதிய சக்தியையும், இரத்தசுத்தியையும் அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

1-சேர் ரூபா 4—8—0 ½-சேர் ரூபா 2—4—0

பிரபல மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

குடல், இரைப்பை சம்பந்தமான வியாதிகளுக்கு எங்களிடம் கலந்து ஆலோசியுங்கள்.

பற்பொடிகளின் அரசன்

‘ஜெயராம்’ காயசுத்தி பற்பொடி 0-4-0

தயாரிக்குமிடம்:- ஜெயராம் வைத்தியசாலை,
28, காசி விஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

பிரபல வியாபாரிகளின் நன்மதிப்பும்
ஆதரவும் பெற்ற
ஜரிகைகலந்த 6, 7, 8, 9, 9½-கெஜங்களில்

பட்டு ஜவுளிகள்

உற்பத்திசெய்துவரும்

எமது இரு ஸ்தாபனங்கள்

Tel. Add: "ARKAYECH" *Phone : 113.*

ஹரிவிலாஸ் ★ சாமி & கோ,

R. K. H. பாலய்யர், லெக்ஷ்மணய்யர்,

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்,

No. 11, *ராமசாமிகோவில் கீழவீதி.* | No. 7, *ராமசாமிகோவில் கீழவீதி,*

கும்பகோணம்.

உ

சிவராமஜெயம்

Phone: 35 Tel :- SILK SAREE.

பிரபல வியாபாரிகளின்

நன்மதிப்பும், ஆதரவும் பெற்ற

ஜரிகை கலந்த

6, 7, 8, 9, 9½ கெஜங்களில்

பட்டு புடவைகள்

உற்பத்திசெய்துவரும்

எமது ஸ்தாபனம்

S. PONNAMBALA CHETTIAR SONS,

&

M. SOMASUNDARAM CHETTIAR,

Lace Silk Sarees Manufacturers,

Sri Ramaswami Koil South Street,

KUMBAKONAM.





பூரண மச்யேந்திர ஆசனம்.

யோகாசன இன்ப மலர்.

ஒரு மாதாந்தரப் பத்திரிகை.

ஜூன் மாதத்தில் வெளிவரும்.

ஆண், பெண், இளைஞர், முதியோர் யாவருக்கும் பயன் படும்பொருட்டு நூதன முறையில் தற்காலத்திற்கு ஏற்ற வாறு பயிற்சிக்கு எளிதாயும் பயனுக்குப் பெரிதாயும் இருக்கிற ஆசனங்கள் தெளிவாக எழுதப்படும். ஆரோக்கிய வாழ்வுக்கு இன்றியமையாத நல் உணவு, நல்லொழுக்கம், பக்தி மார்க்கம் முதலியவைப்பற்றிய கட்டுரைகளும் அடங்கியிருக்கும். நோயற்ற வாழ்வு அடைந்து இன்ப மெய்த பெருந்துணையாக இருக்கும்.

வருடசந்தா ரூ. 2-0-0 தனிப்பிரதி அணா 3.

ஆசன விளக்கம் (7-படங்களுடன்) விலை அணா 10.

பு. து. இரத்தினசாமி பிள்ளை,
ஆசிரியர், யோகாசன இன்ப மலர்.
55, பேட்டை நாயக்காரத்தெரு. கும்பகோணம்.

SPECIAL MAHAMAHA

SHOW ROOM

SOLAR SUPER



Solar watches have taken the market by storm. Very attractive to look at and economical, these watches have proved their worth. Now in 'SOLAR SUPER' model, the manufacturers have accomplished something that will stand the test of time.

Lever – 17 Jewels 10½" Chrome steel Back.
Waterproof Rs 62/-

Lever – 21 Jewels 10½" » Rs. 67/-

Lever – 17 Jewels 10½" Rolled Gold
20 Microns Waterproof Rs. 72/-

Lever – 21 Jewels 10½" Steel Back, Waterproof.
Rolled Gold 20 Microns Rs. 77/-

Sole Importers for India:

R. C. & Co., MADRAS.

Sales & Serviced by:

NATIONAL WATCH Co.,

(Estd. 1938)

KUMBAKONAM.

வீட்டுவிலாசம்:- 11, மேலக்கடலங்குடித்தெரு, குடந்தை.